


# அபிவிருத்திப் புவியியல்

எஸ். ஐ. எம். ஹம்ஸா

புவியியல் – 3

(1995 புதிய பாடத்திட்டத்திற்குரியது)

3 . 2 . மனிதவளம்

3 . 7 . 1 அபிவிருத்தி

911
ஹம்
SL/PR

நூலகம்

# அபிவிருத்திப் புவியியல்

க.பொ.த(உயர்தர) வகுப்புக்குரியது

எஸ்.ஐ.எம்.ஹம்ஸா, B.A.(Hons) Dip - in - Ed
(செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி)

1995

முதலாம் பதிப்பு ஆகஸ்ட் 1984
இரண்டாம் பதிப்பு டிசம்பர் 1984
மூன்றாம் பதிப்பு மே 1987
புதிய நான்காம் பதிப்பு ஆகஸ்ட் 1995

பதிப்புரிமை ஆக்கியோனுக்கே.

விலை ரூபா : 60.00

பசிபிக் அச்சகம் (பி) லிமிரெட்
கொழும்பு 13.



# DEVELOPMENT GEOGRAPHY (Tamil)

By : S. I. M. HAMZAA, B. A. (Hons.) Dip-in-Ed.

New Edition August, 1995

## CERTIFICATE FOR FIRST EDITION

DEVELOPMENT GEOGRAPHY
In Tamil By : S. I. M. HAMSA.

Ref. No. EPAB/2/3417

Approved by the Director General of Education in terms of Section 19 (A) of the code of regulations for assisted vernacular and bilingual schools and English schools published in the Ceylon Government Gazette of February 29, 1952 for use as a Library.

18th Feb. 1985
E. P. A. Board
Malay Street,
Colombo - 2.

**S. K. Nettananda**
Secretary, E. P. A. Board

Copy right reserved

கொழும்புப் பல்கலைக்கழக புவியியற்றுறை
பேராசிரியர் கலாநிதி. (திருமதி) யோகா இராசநாயகம் அவர்கள் உவந்தளித்த

# அணிந்துரை

*1984* இல் திரு.ஹம்ஸா வெளியிட்ட 'அபிவிருத்திப் புவியியல்' என்ற முதலாவது நூல் உயர்தரக் கல்விப் பொதுத் தராதர வகுப்பு மாணவர்களை நோக்கி எழுந்ததாகும். அதன் தொடர்ச்சியாக இந்நூல் அபிவிருத்திப் புவியியலின் ஒரு பகுதியை விரிவாக எடுத்து விளக்குகின்றது. இந்நூலில் அடங்கியுள்ள விபரங்கள் தற்போது அறிமுகஞ் செய்யப்பட்ட புவியியல் புதிய பாடத்திட்டத்திற்கும் பயனுடையதாயிருக்கும்.

அபிவிருத்தி என்பது பொருளாதாரத்திலேயே ஓரளவு புதிதான கருத்து. புவியியலுக்கு இன்னும் புதிதானது. அபிவிருத்தியில் சமூகவியல் ஏதுக்கள் தோற்றிக் கொண்டு இருந்தாலும் அது பொருளாதாரத் துறையிலேயே ஓர் உள் துறையாய் அமையும். எனினும் இடஞ்சார் பொருளாதாரத்திற்கும், **(Spatial Economics)** புவியியற்றுறையின் பொருளாதாரப் புவியியலுக்கும் இடையிலான எல்லை எங்கு என முடிவு செய்தல் இயலாததாகும். இந்நிலையில் அபிவிருத்தியையும் புவியியலையும் ஒன்றிணைத்து அபிவிருத்திப் புவியியல் என ஒரு துறையை அளவை முறை பிறளாது வகுத்தல் இலகுவானதல்ல.

இன்னுமொரு சிக்கல் உண்டு. அபிவிருத்தி முதலிய கோட்பாடுகள் உருப்பெற்ற மொழிச் சூழலில் தமிழ் இல்லை. எனவே அவற்றிற் பயன்படும் கருத்துக் கூறுகள் சொல்லுலகத்துட் புகுந்தது தமிழ் மொழியின் சொல் வளத்தினால் அன்று. இவற்றை விளக்கத் தமிழ்மொழியின் சொற்களை மட்டுமல்ல மரபைக்கூட இழுத்து விரித்துத் தான் இயல முடியும். இதனால் மொழியில் நலிவு ஏற்படுகின்றது. மேலும் இன்னுமொரு மொழியில் உள்ளதைத் தமிழில் பெயர்த்துச் சொல்லும்போது ஒரு செயற்கைத் தன்மை ஏற்படுகின்றது. இத்தகைய நலிந்த செயற்கை மொழியில் மாணவருக்கு விளக்குவது மிகப் பொறுப்பான சேவையாகும்.

பல இடங்களின் மத்தியில் திரு.ஹம்ஸா அவர்கள் இப்புதிய பதிப்பை மேற்கொண்டது பாராட்டுக்குரியதாகும். இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய தகுதிப்பாடுகளை திரு.ஹம்ஸாவிடம் எதிர்பார்க்கலாம். அவரது இந்நூலும் மாணவர் களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்படட்டுமாக.

புவியியற்றுறை, **பேராசிரியர் கலாநிதி. யோ. இராசநாயகம்**
பல்கலைக்கழகம்,
கொழும்பு.
1995.08.03



# முன்னுரை

*1979* ஆம் ஆண்டில் க.பொ.த.(உயர்தர) வகுப்புக்களுக்கான புதிய புவியியல் பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்பும் பாடத் திட்டத்திற்கேற்ப தமிழ் மொழியில் ஒரு நூலாவது வெளிவராமை கண்டு எனது முதல் நூலான 'அபிவிருத்திப் புவியியலை' இரு பதிப்புகளாக 1984, 1985 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டேன். அந்நூலுக்கு ஆசிரியர்களும், மாணவர்களும் தந்த பெரு வரவேற்பு குறுகிய காலத்திலேயே நூல்கள் யாவும் விற்பனையாகக் காரணமாயிற்று. ஆனாலும் பல பொருளாதார நெருக்கடிகள் காரணமாகத் தொடர்ந்தும் இந்நூலை வெளியிடுவதில் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியவனானேன். ஆனால் மாணவர்களும், ஆசிரியர்களும் பலமுறை நேரடியாகச் சந்தித்தும், கடித மூலமும் இது மிகைப் பயனுள்ள நூல். எப்படியாவது மீண்டும் மறுபதிப்பாக 'அபிவிருத்திப் புவியியலை' வெளியிடும்படி தொல்லை தந்து கொண்டே இருந்தனர். சிலர் உதவி செய்யவும் முன்வந்தனர். ஆனால் சொந்தக்காலில் நிற்க வேண்டுமென்ற என்னுடைய ஒரு பிடிவாதம் இம் முயற்சிகளை பின்தள்ளிக் கொண்டே சென்றது. என்றாலும் தற்போது சில சூழ்நிலைகள் ஒத்து வந்ததன் காரணமாக 'அபிவிருத்திப் புவியியலை'ப் புதிய பதிப்பாக மீண்டும் தருகின்றேன். ஆனாலும் அபிவிருத்தியில் புதிய பல பகுதிகள் இன்று நுழைந்திருப்பதாலும், உயர்தரப் பரீட்சை வினாப்பத்திரங்களில் அபிவிருத்தியில் விரிவடைந்துள்ள புதிய மாற்றங்கள் வினாவாக வருவதனாலும் இந்நூலில் உலகின் அபிவிருத்திப் பின்னணி, போக்கு ஆகியவற்றை மட்டும் எடுத்து பல தரவுகளுடன் விரிவாகத் தந்துள்ளேன். முன்னைய பதிப்புக்களில் போல் இலங்கையின் அபிவிருத்தியும், சர்வதேச நாடுகளின் சார்புத் தன்மையும் இதனில் சேர்க்கப்படாது அவற்றை வெவ்வேறு நூல்களாக விரிவாகத் தரவுள்ளேன். தொடர்ச்சியாக வெளிவரும் நூல்களாக நீங்கள் அவற்றை விரைவில் எதிர்பார்க்கலாம்.

இந்நூல் தற்போது 1995 ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள 'புதிய புவியியல்' பாடத்திட்டத்திற்கும் மிகப் பொருந்துவதாகவே அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி சமூகக்கல்வி, பொருளியல், வணிகம் போன்ற பாடங்களுக்குத் தேவையான அம்சங்கள் பலவும் இதனில் காணப்படுகின்றன. ஆகவே இந்நூல் ஆசிரியர் பலருக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் என்ற வகையில் தொடர்ந்தும் அவர்கள் தரும் ஊக்கத்தினையும், ஆதரவையும் எதிர்பார்க்கின்றேன். சிரமங்களின் மத்தியிலும் மீண்டுமொரு முறை இதனை வெளியிடப் பேருதவி செய்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி சொல்வதுடன், முதல் நூலிலிருந்து இன்றுவரை சகல வழிகளிலும் ஊக்கமளித்து உதவிபுரிந்த பலருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

முதல் நூலை உருவாக்குவதில் துணைபுரிந்த முன்னாள் பாடவிதான புவியியல் கல்வி அதிகாரியும் இன்றைய தே.க.நி. வணிகத்துறைப் பணிப்பாளருமான திரு.கே.விக்ரமரத்ன, கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.பி.கே.பி.தர்மசேன, தினகரன் உதவி ஆசிரியர் ஜனாப் எம்.எச்.எம்.ஷம்ஸ் ஆகியோருக்கு மீண்டுமொரு நன்றி கூறுவதுடன், இந்நூலுக்குத் தேவையான பல தகவல்களைத் தந்துதவிய இலங்கையின் சகல பல்கலைக் கழகங்களினதும் புவியியற்றுறைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோருக்கும், புதிய விவரத் திரட்டுக்களைப் பெற்றுக் கொள்வதில் உதவிபுரிந்த வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள், தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் போன்றோருக்கும் என் நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்.

இறுதியாக முதல் நூலுக்கு வழங்கியது போன்று இந்நூலுக்கும் சிறந்தவொரு அணிந்துரையை ஆக்கித் தந்த பேராசிரியர் கலாநிதி திருமதி.யோகா இராசநாயகம், உரையாடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 'உங்கள் அபிவிருத்திப் புவியியலை மீண்டும் எப்போது வெளியிடப் போகின்றீர்கள்' என என்னை அவசரப்படுத்தியதுடன், தம்மைத் தேடி வருகின்ற அச்சகர்களுக்கெல்லாம் அறிமுகஞ் செய்து மீண்டுமொரு முறை இதனை விரைவாக வரப்பண்ணிய தேசிய கல்வி நிறுவக மொழிகள் இணைப்புக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் திரு.கு.சோமசுந்தரம், அழகான முறையில் அட்டையை ஒழுங்கமைத்துத் தந்த தினகரன் உதவி ஆசிரியர் ஜனாப் எம்.எச்.எம்.ஷம்ஸ், திறமையாக கணனிப்படுத்தித் தந்த செல்வி. கமலவேணி கந்தையா, அச்சுப் பதித்துத் தந்த அச்சக அதிபர் உட்பட சக ஊழியர்கள் ஆகிய சகலருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நூலிலும் எனது பார்வைக்கெட்டாத பல குறைபாடுகள் காணப்படலாம். அவற்றை நல்ல மனங்கொண்டு சுட்டிக் காட்டினால் பணிவோடு ஏற்று அடுத்த பதிப்புக்களில் திருத்தி வெளியிட முயல்வேன்.

நன்றி

எஸ்.ஐ.எம்.ஹம்ஸா

B-53, 02/03, தேசிய வீடமைப்புத்திட்டம்,
கொழும்பு-10
1995.08.09



## உள்ளடக்கம் — பக்கம்


1. அபிவிருத்தி என்பதன் வரைவிலக்கணம் 01
   - பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டெழுந்த வரைவிலக்கணங்கள்.
   - சமூகக்காரணிகளையும், ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டெழுந்த வரைவிலக் கணங்கள்.

2. அபிவிருத்திப் பின்னணியில் உலக நாடுகள் 14
   - பிரதானமான சில உலக நாடுகள்
   - அபிவிருத்தி அடைந்த நாடுகள்
   - அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள்
   - குறைந்த வருமானப் பொருளாதார நாடுகள்
   - நடுத்தர வருமானப் பொருளாதார நாடுகள்
   - உயர் வருமானப் பொருளாதார நாடுகள்
   - முதலாம் உலக நாடுகள்
   - இரண்டாம் உலக நாடுகள்
   - மூன்றாம் உலக நாடுகள்

3. அபிவிருத்தியை அளத்தல் 34
   - அளவீட்டு விளக்கம்
   - அளத்தலின் நோக்கம்
   - அளத்தல் முறைகளும், காரணிகளும்
     × பொருளாதாரக் காரணிகளைக் கொண்ட அளவீட்டு முறைகள்.
     × சமூகக் காரணிகளைக் கொண்ட அளவீட்டு முறைகள்.
     × பௌதிக வாழ்க்கைப் பண்புச்சுட்டியின் அடிப்படையிலான அளவீட்டு முறைகள்.
     × மனித அபிவிருத்திச் சுட்டி அடிப்படையிலான அளவீட்டு முறைகள்.
   - அபிவிருத்தியை அளத்தலின் பிரச்சனைகளும் முடிபும்

4. அபிவிருத்திப் பரம்பலும், இடைவெளியும் 64
- அபிவிருத்திப் பரம்பல் அமைப்பின் தன்மை
- அபிவிருத்திப் பரம்பல் அமைப்பில் அபிவிருத்தி அடைந்த நாடுகளும், அபிவிருத்தி அடைந்து வரும்,நாடுகளும்
× சனத்தொகை அடிப்படையில்
× இயற்கை வள அடிப்படையில்
× தொழினுட்ப அடிப்படையில்
× மூலதன அடிப்படையில்

5. அபிவிருத்தியின் பெறுபேறுகள் 71



# 1

# அபிவிருத்தி என்பதன் வரைவிலக்கணம்

அபிவிருத்தி என்பது இன்று எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்ற ஒரு சொல்லாக விளங்குகின்றது. அதனிலும் குறிப்பாக பொருளியல், அரசியல், சமூகவியல் துறைகளில் இது வெகுவாகப் பிரயோகிக்கப்படுகின்றது. 1960 ஆம் ஆண்டுகளில் இது புவியியல் துறைகளிலும் இடம் பெற்றது.

அபிவிருத்தி பற்றிப் பேசப்பட்ட ஆரம்ப கால கட்டங்களில் அபிவிருத்தியும் பொருளாதார வளர்ச்சியும் ஒரு எண்ணக்கருவைப் போன்று உபயோகிக்கப்படலாயிற்று. ஆனால் பின்னர் அது வேறும் துறைகளுக்குள்ளும் நுழைய ஆரம்பித்ததும் இது தொடர்பாகப் பரவலான கருத்து விவாதங்கள் தோன்றின. இன்று வரையிலும் இது விவாதிக்கப்பட்டு வரும் ஒன்றாகவே விளங்குகின்றது. இதற்கான காரணங்களாக பின்வரும் சிலவற்றையும் எடுத்துக் காட்டலாம்.

(i) அபிவிருத்தியைத் தம்முடன் இணைத்துக் கொண்டுள்ள பல்வேறு கலைத்துறைகளும் அபிவிருத்தி பற்றிய எண்ணக் கருவிற்கு ஒன்றுக்கொன்று முரணான வரைவிலக்கணங் களைத் தந்திருத்தல்.

(ii) அபிவிருத்தி என்பதன் மூலம் எதிர்பார்க்கும் விடயங் கள் காலத்திற்குக் காலம் வேறுபட்டுச் செல்லுதல்.

(iii) ஒரே கற்கைத் துறையைச் சார்ந்த பல்வேறு அறிஞர்களும் அபிவிருத்திக்கான வரைவிலக்கணத்தை வெவ்வேறு வகையில் வெளிப்படுத்தியிருத்தல்.

ஆகவே அபிவிருத்தி என்றால் என்ன என்பது பற்றிப் பொதுவானதும், யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான பூரணத்துவம் வாய்ந்த ஒரு கருத்தினைக் கொடுக்க முடியாதுள்ளது. எனினும் இன்று முன் வைக்கப்பட்டுள்ள பல வரைவிலக் கணங்களையும், கருத்துக்களையும் தொகுத்துச் சுருக்கி அபிவிருத்தி என்றால் என்ன என்பதை ஓரளவு தெளிவுபடுத்திக் கொள்ள முடியுமாகும்.

அபிவிருத்தி பற்றிய கருத்துக்களும், வரைவிலக்கணங்களும் தோற்றம் பெறுவதற்கு மூல காரணங்களாக அமைந்தவை உலக நாடுகளிடையே சில அடிப்படையில் அமைந்த இடைவெளிகளாகும். இதனைப் பின்னணியாகக் கொண்டுதான் அபிவிருத்தி பற்றி அரசியல்வாதிகள், பொருளியலாளர்கள், சமூகவியலாளர்கள், மனோதத்துவவியலாளர்கள், மற்றும் பல்துறை அறிஞர்கள் போன்றோராலும், சர்வதேச தாபனங்கள் பலவற்றினாலும் பல்வேறு வரைவிலக்கணங்கள் தரப்பட்டுள்ளன. இவ்வாறான எல்லா வரைவிலக்கணங்களும் இன்று காலத்திற்கும், சூழலுக்கும், சந்தர்ப்பத்திற்குமேற்ப மாற்றம் பெற்றுக் கொண்டும் உள்ளன. இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களை ஓரளவு விளங்கிக் கொள்வதற்காக அவற்றை இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

(i) பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டெழுந்த வரைவிலக்கணங்கள்.

(ii) சமூகக் காரணிகளையும், ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டெழுந்த வரைவிலக்கணங்கள்.


## பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டெழுந்த வரைவிலக்கணங்கள்.

பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டவர்களில் W.W றொஸ்ட்டோ (W.W.Rostow), குஸ்நெட் (Kusnest), ஆகியோர் பல எடுகோள்களின் கீழ் வரைவிலக்கணங்களைத் தந்தனர். இவர்கள் அபிவிருத்தி பற்றிக் கூறும்போது அரசியல்,



சமூகவியல் என்பவற்றை விட அபிவிருத்தி என்பது பொருளியல் துறையிலேயே அதிகம் பேசப்படுகின்றது என விளக்கமளித்தனர். மூலவளம், சனத்தொகை, தொழினுட்பம், மூலதனம் ஆகிய நான்கு காரணிகளும் ஒருசேர இணையும் போது அபிவிருத்தியின் வளர்ச்சிக் கட்டம் ஏற்படுகின்றதென்றும், இவ்வாறான நிலைமையைச் சாதகமாகக் கொண்டநாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகள் என்றும் றொஸ்ட்டோ கருத்து வெளியிட்டார்.

(HDC)அபிவிருத்தியின் வளர்ச்சிக் கட்டம்




N. ஜின்ஸ் பேர்க் (Ginsburg) என்பார் ஐந்து குறிகாட்டிகளை (சுட்டிகளை) அடிப்படையாகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தியை அளவிடுவதன் மூலம் அபிவிருத்தி பற்றிய கருத்துக்களை வெளியிட முயற்சித்துள்ளார்.

சாமு வேல்ஸன் என்பார் இன்னும் பல புதிய குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி என்பதை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கும், பொருளாதார வளர்ச்சி என்பதை அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் உரியனவாகக் கொண்டு அபிவிருத்தி பற்றிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அபிவிருத்திக் காரணிகளின் உச்சப் பயன்பாடு பெறப்படுவதனாலேயே இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டதென இவர் கருதினார்.

கின்டல் பேர்கர் என்பார் பொருளாதார அபிவிருத்தி என்பது உற்பத்தியின் அதிகரிப்பும், அந்த உற்பத்தி அதிகரிப்பிற்குத் தூண்டுகோலாயமைந்த தொழினுட்பங்களினதும், நிறுவன அமைப்புக்களினதும் முன்னேற்றங்களுமாகும் என்றார்.

மியர், அடல்மன் ஆகியோர் நாட்டின் மொத்த உற்பத்திகளின் தடையீடில்லா விருத்தி அபிவிருத்தி என்றனர். அத்தோடு நீண்ட காலத்தில் தலாநபர் மொத்தத் தேசிய உற்பத்திப் பெறுமானத்தில் ஏற்படும் வளர்ச்சித் தொழிற்பாடு பொருளாதார அபிவிருத்தியாகும் என்றும் இவர்கள் கருதினர்.

அணிசேரா இயக்கத்தின் கருத்துப்படி குடியேற்ற நாட்டு ஆட்சியின் கீழிருந்த நாடுகளும், குறைவிருத்தி நாடுகளும் அவற்றின் பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு நிற்பதே அபிவிருத்தியாகும் எனப்பட்டது.

மேற்கூறிய கருத்துக்களைத் தொடர்ந்து ரிச்சர்ஸன், நிக்களஸ் கார்டன், வோல்ட்டர், எல்கன் போன்றோரும் பின்னைய காலங்களில் பொருளாதார அடிப்படையில் அமைந்த பல்வேறு கருத்துக்களையும் அபிவிருத்தி சம்பந்தமாக வெளியிட்டனர்.

## சமூகக்காரணிகளையும், ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டெழுந்த வரைவிலக்கணங்கள்

அபிவிருத்தி சம்பந்தமாக சமூக அடிப்படையில் அமைந்த காரணிகளைக் கொண்டவர்களில் குணார் மிர்டால் என்பாரும் ஒருவர். இவர் அபிவிருத்தி என்பது முழுச் சமுதாய அமைப்புக்களும் முன்னேற்றத்தை நோக்கிச் செல்லுதலும், சமூகத் தேவைகளின் நிறைவு வளர்ச்சி பெறுதலும் ஆகும் என்றார்.

கொவ்லட் (Goulet) என்பார் அபிவிருத்தி பற்றிக் கூறும்போது அபிவிருத்தியின் இலக்கு சக்தி மிக்க சமூகமொன்றின் அத்தியாவசியத் தேவைகளையும், விடுதலையையும் பூரணமாக நிறைவு செய்தலாகும் என்றார்.

ஹேஸ்மன் (Hershmann) என்பவர் சமூகக் காரணிகளோடு ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி பற்றிய கருத்துக்களை வெளியிட்டார். இவர் அபிவிருத்தி என்பது ஒரு நாட்டின் பொருளாதாரத் துறையில் ஏற்படும் அபிவிருத்தி மாத்திரமன்று, பொருளாதாரத்துறை அபிவிருத்திக்கு அந்நாட்டின்



சமூக, கலாசார, அரசியல் துறைகளிலும் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமெனக் கருதினார்.

பாஸ்ட்டர் என்பார் அபிவிருத்தி பற்றிக் கூறும்போது பொருளாதாரக் காரணிகளினதும், சமூகக் காரணிகளினதும் இணைப்பை வலியுறுத்தியுள்ளார். அபிவிருத்தியின்போது தனித்தனியான பொருளாதார, சமூக வளர்ச்சிகளைவிட மேலதிகமாக உற்பத்தி அமைப்புக்களுக்கிடையிலும், சமூகங்களுக்கிடையிலும் ஒருவகைப் பரிமாற்ற இணைப்பு ஏற்படுகின்றது எனக் கூறினார்.

ஜஸ்டின் டயஸ் என்பவரும் பாஸ்ட்டரின் கொள்கை நிலையில் நின்றே பொருளாதார வளர்ச்சியும், மனித நலவுரிமைகளும் ஒன்றிணையும்போதே அபிவிருத்தி ஏற்படுவதாகக் கூறினார்.

உலகின் பலம் வாய்ந்த தாபனங்களில் முதன்மை பெறும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் இன்றைய கொள்கைகளுள் அபிவிருத்தியே முதன்மை பெறுகின்றது.

1946 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் தாபனம் இந்தப் பிரச்சினையின் பக்கம் முதன்முதலாக நோக்கத் தொடங்கியபோது சமாதானம், அன்னியோன்ய உறவு ஆகியவற்றையே கருத்திற் கொள்ளத் தொடங்கியது. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கிளை நிறுவனங்களின் மூலம் குறிப்பாக "யுனெஸ்கோ" (UNESCO) வின் கீழ் இது சம்பந்தமாக ஆராயப்பட்டது. இந்த அடிப்படையில் சர்வதேச ரீதியிலான அபிவிருத்தி நோக்கு உருவானது. இதற்கு அடிப்படையாகப் பின்வருவன முன்வைக்கப்பட்டன.

- ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க மக்களின் தாழ்த்தப்பட்ட நிலைமைகள், அவர்களின் வாழ்க்கைத் தர வீழ்ச்சி.
- தொழிநுட்ப அபிவிருத்திக்காக அழிவுக்குட்பட்ட நாடுகளில் அதிகளவு மூலதனம் முடக்கப்பட்டமை.
- நிர்வாகத்துறை முன்னேற்றத்தில் மாற்றங்கள் நிகழ்ந்தமை.

- அபிவிருத்தி அடைந்த நாடுகளினதும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளினதும் இடைவெளி மிக விரிவாகிக் கொண்டு வந்தமை.

- உலக சனத்தொகைப் பெருக்கம் கட்டுப்பாடின்றி அதிகரித்தமை. இதனால் கல்வியறிவில்லாதோர் தொகை அதிகரித்தமை.

- கூடிய சனத்தொகை வளர்ச்சி வீதம்.

- உலகில் பயங்கர ஆயுதங்களின் உற்பத்தியும், போட்டியும் இது வறிய நாடுகளுக்குச் சவாலாக அமைதலும்.

இவ்வாறான ஆய்வுக் கருத்துக்களின் பின்னணியின் முடிவில், உலகம் அபிவிருத்தி அடைந்தால் மாத்திரமே உலக சமாதானம் நிலைபெறுமென்பதைக் கருத்திற் கொண்டு, ஐக்கிய நாடுகள் தாபனம் அபிவிருத்தி என்பது பொருளாதார, சமூக இணைப்புக்களின் கூட்டென்பதனைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டியுள்ளது.

காலத்திற்குக் காலம் அது வெளியிட்டு வந்துள்ள கருத்துக்களின் மூலம் "அபிவிருத்தி என்பது உலக மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதென்றும்", "உற்பத்தியை வினைத்திறன் அடையச் செய்தலும், சமூகத்திற் சமநிலையை ஏற்படுத்துதலும் அபிவிருத்தியின் மூலமே ஏற்பட வேண்டுமென்றும், இதற்காக செல்வம், வருவாய் ஆகியன சமமாகப் பகிரப்பட வேண்டுமென்றும்", "யுனெஸ்கோ" வெளியிட்டுள்ள கருத்தின்படி "அபிவிருத்தி என்பது பொருளாதாரமும், சனத்தொகையும் பற்றிய காரணிகளை மட்டுமன்றி சமூகமும், கலாசாரமும், பண்பாடும் பற்றிய காரணிகளையும் இணைத்துக் கொண்டதும், மாறுதல்களையும், வளர்ச்சிகளையும் கொண்டதுமான ஒரு செயற்பாடு" எனவும் கூறியுள்ளது.

மேற்கூறிய யாவற்றையும் விஞ்சியதாக அபிவிருத்தி பற்றிய மிக அண்மைக்கால பொருளாதார, சமூக, ஏனைய இணைப்புக்



காரணிகளுடன் கூடிய கருத்துக்கள் விளங்குகின்றன. இதன்படி அபிவிருத்தி என்பது பொருளாதார, சமூக, ஏனைய துறைகளின் இணைவான விருத்தி அல்லது வளர்ச்சி அல்லது முன்னேற்றம் என்றும், அது மாற்றமடையக் கூடிய தொடர்ச்சியான செயற்பாடு என்றும் கருதப்பட்டது.

புதிய கருத்துக்களின் பின்னணிக்கேற்ப பேராசிரியர் டட்லி சீயர்ஸ் (Dudly Seers) 1969 ஆம் ஆண்டிலிருந்து கடந்த பத்தாண்டுகளைக் கொண்ட ஒரு காலப் பகுதியை உதாரணமாகக் கொண்டு அபிவிருத்தியின் தன்மைகளை விளக்க முயன்றுள்ளார். இவரின் கருத்துக்கள் 1969 ஆம் ஆண்டில் புதுடில்லியில் நடைபெற்ற சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் பதினோறாவது உலக மகாநாட்டில் வெளியிடப்பட்டது.

இக் கருத்துக்களின்படி சனத்தொகை வளர்ச்சி வேகத்தைவிட தேசிய வருமானத்தின் வளர்ச்சி வேகம் விரைவாகவும், அதிகமாகவும் இருப்பின் உடனடியாக அல்லது காலந் தாழ்த்தி சமூக, அரசியற் பிரச்சினைகளுக்கு அது தீர்வாக அமையுமென்ற கருத்தை ஏற்றாலும், கடந்த பத்தாண்டுகளில் அதன் பிரதிபலன் எந்தளவு சரியானதென்பதை அவர் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். மேற்குறித்த கால எல்லைக்குள் பல நாடுகளில் அபிவிருத்தியின் பல்வேறு நிலைகளிலும் சமூகப் பிரச்சினைகளும், அரசியற் கிளர்ச்சிகளும் தோன்றியுள்ளன என்றும், இவ்வாறான நிலைமையை விரைவாக வளர்ச்சியடையும் தலாநபர் வருமானங்களைக் கொண்ட நாடுகளிலும், வளர்ச்சி குன்றிய நாடுகளிலும் காண முடிந்தது என்பதனையும் சீயர்ஸ் எடுத்துக் காட்டினார். ஆகவே உண்மையில் பொருளாதார வளர்ச்சியானது சமூக, அரசியற் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் தோல்வி காணமாட்டாதெனத் தென்பட்டாலும், சிலவகையான வளர்ச்சி அத்தகைய பிரச்சினைகளைத் தோற்றுவிக்க முடியுமென்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டுமென்றும் கூறினார். எனவே "அபிவிருத்தி" என்பதைச் சுற்றி நாம் இன்று உருவாக்கிக் கொண்டுள்ள கற்பனையுருவங்களைக் கலைதல் வேண்டுமென இவர் கூறினார்.

ஆகவே ஒரு நாடு அபிவிருத்தி அடைந்துள்ளதா என ஆராயும்போது முக்கியமான மூன்று பிரச்சினைகளுக்கு விடை காணப்பட்டுள்ளனவா என வினவுதல் வேண்டுமென டட்லி சியர்ஸ் கூறினார்.

அவைகளாவன:

அங்கு வறுமைக்கு என்ன நிகழ்ந்து வந்துள்ளது?
வேலையின்மைக்கு என்ன நடந்து வந்துள்ளது?
சமத்துவ மின்மைக்கு என்ன நிகழ்ந்துள்ளது?

முதலாவது வினாவுக்கான விடையாக "போதியளவு உணவு என்பதைக் கருத முடியுமென்றார். ஒருவனின் போஷாக்கு குறித்த சில அளவை விடக் குறையும்போது அவனது உடல்வலிமை, ஆரோக்கியம், உற்சாகம் ஆதியன குறைந்து விடுகின்றன. உணவைக் கொள்வனவு செய்வதற்கு வருமானம் உதவுகிறது. எனவே இதற்கான அளவு கருவியை வருமான மட்டங்களில் காட்டலாம். இது ஏனைய ஆகக் குறைந்த தேவைகளையும் கருத்திற் கொள்ள உதவுகிறது. மக்கள் எவ்வளவுதான் வறியவர்களாக இருந்தாலும் தத்தமது செல்வம், சக்தி ஆகிய எல்லாவற்றையும் உணவுக்காக மாத்திரம் செலவு செய்ய மாட்டார்கள். உணவுடன் ஏனைய அடிப்படைத் தேவைகளான உடை, உறையுள், அத்தியாவசியப் பொருட்கள் முதலியவற்றையும் உள்ளடக்க வேண்டியுள்ளது. இத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டவுடன் பணத்தின் பயன்பாடு குறைந்து செல்லத் தொடங்குகின்றது என்றார்.

இரண்டாவது வினாவிற்கான விடையை நோக்கும்போது தொழிலின்றி மனிதனின் ஆளுமை விருத்திபெற மாட்டாது. இது வெறுமனே தொழில் வாய்ப்பினைக் குறிக்கவில்லை. கல்விகற்றல், தனது வீட்டுச் சூழலில் வேலை செய்தல், வீட்டுத் தோட்டமொன்றைப் பராமரித்தல் போன்ற யாவற்றையும் இது உள்ளடக்கும் என்றும், நிரந்தரமாக வேலையின்றி இருத்தல், உணவிற்குக்கூட இன்னொருவரது உழைப்புத்திறனில் தங்கியிருத்தல் ஆகிய மேற்சொன்ன எதையாயினுமே செய்யாதிருத்தலானது ஒருவரின் சுயமரியாதைக்கும், மதிப்புக்கும் ஏற்றதொன்றல்ல. குறிப்பாக எதிர்காலத்தின் உயர் இலட்சியங்களோடு பல ஆண்டுகளைப் பாடசாலையிலும், சர்வ கலாசாலையிலும் கழித்த ஒருவரின் விடயத்தில் இது முக்கியம் பெறுகின்றது என்றார்.

வறுமை, வேலையின்மை ஆகிய இரண்டும் தலா நபர் வருமானத்துடன் பல்வேறு விதத்தில் தொடர்புபடுவது உண்மையே. தலா வருமானங்கள் வீழ்ச்சியடையும்போது முழுதான வறுமை நிலையைக் குறைப்பது கடினமாகும். அதேநேரம் தலா வருமான



அதிகரிப்பு இப்பிரச்சினைகளைப் போக்குமெனவும் கூறமுடியாது. பெற்றோலியப் பொருளாதாரங்கள் எமக்கு எடுத்துக்காட்டி நிற்பது போன்று வறுமை, வேலையின்மை என்ற இரு பிரச்சினைகளுள் ஒன்றையாவது தீர்ப்பதற்குத் தலா நபர் வருமானத்தின் அதிகரிப்பு உதவாது. தலா நபர் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பானது அதிகரித்துச் செல்லும் வேலையின்மைப் பிரச்சினையுடன் ஏற்படலாம். அல்லது வேலையின்மைப் பிரச்சினையைத் தோற்றுவிக்கலாம். எடுத்துக் காட்டாக டிரினிடாத்தில் (வெனிசுவீலா) 1953-1968 ஆம் ஆண்டுக் காலத்தில் தலா நபர் வருமான வளர்ச்சி வருடாந்தம் சராசரி ஐந்து சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. அதேநேரம் வேலையின்மையானது மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் பத்துச் சதவீதத்திற்கும் அதிகமான அளவில் நிலையாகவும் உறுதியாகவும் வளர்ந்து வந்தது என்றார்.

மூன்றாவதாக அபிவிருத்தியின் மூலக்கூறாக சமத்துவம் கொள்ளப்பட வேண்டுமென சீயர்ஸ் கருதினார். இன்றைய உலகில் குறிப்பாகக் கைத்தொழில் நாடுகளுக்கு வெளியே காணப்படும் சமத்துவமின்மையானது சமய, பண்பாட்டு அடிப்படையில் வெறுக்கத்தக்கனவாக, கண்டிக்கத்தக்கனவாகக் காணப்படுகின்றன. ஒரு சமத்துவ சமூகத்திற் காணப்படும் சமூகத் தடைகள், உயர் வருமானம் பெறுவோரின் ஆளுமைகளை உருத்திரித்து விடுகின்றன. வறுமையால் பீடிக்கப்பட்டுள்ள மக்களது நிலைமைகள் இதற்கு விதிவிலக்கல்ல. தலைமுறைகள், மொழி, உடை, பழக்கவழக்கம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட குறுகிய பயனற்ற வேறுபாடுகள் அடியோடு அவசியமற்ற முக்கியத்துவத்தையே பெறுகின்றன. இவை நகைப்புக்கிடமானவையே. சமூகப் பண்பும், நல்லெண்ணமும் பற்றி கற்றோரிடையிற்றான் வெறுப்பு, புறக்கணிப்பு போன்ற இழிவான தன்மைகள் ஏற்படுகின்றன. சாதி என்பது வழக்கமாக வருமானத்துடன் உயர்ந்த அடிப்படையில் தொடர்புபட்டிருப்பதனால் பொருளாதார சமத்துவமின்மையானது சாதி சார்ந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு அல்லது நெருக்கடி நிலைகளின் மத்தியிற்றான் காணப்படுகின்றது என்றார்.

ஆகவேதான் ஒரு நாட்டின் அபிவிருத்தி பற்றி வினவும்போது முன்னைய மூன்று வினாக்களும் முக்கியம் பெறுகின்றன என்றார். இந்த மூன்றிலும் வீழ்ச்சி காணப்பட்டால் சந்தேகத்திற்கிடமின்றி

அந்நாட்டில் அபிவிருத்தியுடன் கூடிய ஒரு காலப்பகுதி இருந்துள்ளது எனக் கூறலாம். இவற்றுள் ஒன்று அல்லது இரண்டு மிக மோசமாக வளர்ந்து சென்றால் தலா வருமானம் இருமடங்காக அதிகரித்தாலும் அவற்றின் விளைவுகளை "அபிவிருத்தி" எனக் கூறுவது விந்தையாகும் என டட்லி சீயர்ஸ் கூறினார்.

இவற்றைத் தவிர இன்று அபிவிருத்தி தொடர்பாகப் பரம்பி வருகின்ற பல கருத்துக்களையும் வைத்துக் கொண்டு மேலும் பல அறிஞர்கள் மேற்கத்தைய முதலாளித்துவக் கருத்துக்களெனவும், சோஷலிசக் கருத்துக்களெனவும் நோக்குவதும் காணப்படுகின்றது.

அதாவது முதலாளித்துவக் கருத்துக்களில் பொருளியல், சமூகவியல், மனோதத்துவ இயல் அறிஞர்களின் கருத்துக்களையும், சோஷலிசக் கருத்துக்களில் மாக்சிஸ, நவமாக்சிஸக் கருத்துக்களையும் இவர்கள் வேறு பிரித்துக் காட்டுகின்றனர்.

ஆகவே இவ்வாறு பல வகையிலும் வெளிக் கொணரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது "அபிவிருத்தி" என்ற எண்ணக்கரு சம்பந்தமாகப் பொதுவான சில முடிபுகளை நாம் பெறமுடியுமாகும். அவையாவன:

* இது மக்களின் எண்ணங்களையும், அபிலாசைகளையும் அடிப்படையாகக் கொண்ட எண்ணக்கருவாகும்.
* பண்பியல் சார்ந்த எண்ணக்கருவாகும்.
* எல்லாவற்றினதும் பொதுவான அடிப்படை சமூக, பொருளாதார வளர்ச்சி என்பதாகும்.
* உலக நாடுகள் யாவற்றிலுமே அபிவிருத்தியானது ஒரு மையத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது.
* அளவிட்டுக் காட்டமுடியாத எண்ணக் கருவாகும்.



* காலத்தால் அல்லது கருத்தால் வரையறை செய்யமுடியாத எண்ணக்கருவாகும்.
* அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு அமைப்புக்களை உருவாக்கியிருத்தல், உதாரணமாக, குறைவிருத்தி, அபிவிருத்தி அடைந்துவரும் தன்மை, அபிவிருத்தி அடைந்த தன்மை போன்றன.

அபிவிருத்தி பற்றிய கருத்துக்களிலிருந்து நாம் இன்று ஒரு முடிவுக்கு வரவேண்டுமானால் இவற்றின் கருத்துச் சுருக்கங்களைக் கிரகித்தல் அவசியமாகும். இக்கருத்துக்களிலிருந்து விளங்கும் முக்கிய ஒரு விடயம் "அபிவிருத்தி" என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் சகல நிலைமைகளிலும் அதிகரிப்பதாகும் என்பதே. இவ்வாறு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் ஒரு நிலையென அபிவிருத்தியைக் கொண்டால், அபிவிருத்தியின்போது மக்கள் வாழ்வதற்கான தேவைகளை இலகுவாக பெற்றுக் கொள்ளும் நிலைமை ஏற்படுதல் வேண்டும். இவற்றை வகைப்படுத்தினால் உணவின் போதியளவு நுகர்வும் போஷாக்கும், உடையும் உறையுளும், கல்வி சுகாதார வசதிகள், தொழில் வாய்ப்புக்கள், சமூக பாதுகாப்பு, ஓய்வு, சுதந்திரம் எனக் குறிப்பிடலாம். இவை நிறைவு பெறும்போது ஏற்படும் நிலையை "அபிவிருத்தி அடைந்த தன்மை" என்றும், அவ்வாறில்லாத பட்சத்தில் "குறைவிருத்தித் தன்மை" என்றும் குறிப்பிடலாம்.

மேற்காட்டிய மனித அடிப்படைத் தேவைகளை நோக்கும்போது அவை மனித சமூகத்தின் பொருளாதார, சமூக, கலாசார தேவைகள் என்பதைத் தெளிவாக உணரலாம். அவ்வாறாயின் ஒரு நாடு அபிவிருத்தியடையும்போது மனித சமூகத்தின் பொருளாதார, சமூக, கலாசார நிலைமைகளின் தராதரங்கள் யாவுமே உயர்வடைதல் வேண்டும் என்பது புலனாகின்றது. இவ்வாறு ஒரு நாடு அபிவிருத்தியடையும்போது அங்கு மனித சமூகத்தின் பெரும் பகுதியினரின் வருவாய் உயர்வடைவதுடன் அதனால் சமூக, கலாசார நிலைமைகளிலும் அபிவிருத்தியைக் காணலாம். இதன் மூலம் நாம் ஒரு விடயத்தை உணரமுடியுமாகும். அதாவது ஒரு நாடு அபிவிருத்தி நிலையை எய்தும்போது பொருளாதார அபிவிருத்திக்கு

முதலிடம் அளிக்க வேண்டுமென்பதாகும். நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்யாது சமூக, கலாசார அபிவிருத்தியை ஏற்படுத்துவது கடினமாகும். இங்கும் சில விடயங்களை முக்கியமாகக் கவனத்திற் கொள்ளுதலும் இன்றியமையாதது. எந்தவொரு நாட்டிலும் அபிவிருத்தி பற்றிப் பேசப்படும்போது பொருளாதார அபிவிருத்தியென்றோ, சமூக அபிவிருத்தியென்றோ வேறுபடுத்தி நோக்குதல் பொருத்தமற்றதாகும். இவையிரண்டும் ஒருங்கிணைந்த முழுமையான செயற்பாடென்பதனைக் கருத்திற் கொள்வதே பொருத்தமாகும். இதற்குக் காரணம் சமூக அமைப்புக்கள் பொருளாதார, பொருளாதாரமல்லாத இரு துறைகளிலும் ஊடுருவுவதாகும். இதன் மூலம் இன்னொன்றை விளங்குவதாக இருந்தால் "அபிவிருத்தி" என்ற எண்ணக்கரு பொருளாதாரக் காரணிகளையும் தாண்டி மென்மேலும் விரிவடைந்து சமூகவியல் எண்ணக்கருவாக மாறுவதனையும் காணலாம்.

மற்றொரு வகையிற் கருதும்போது அபிவிருத்தி என்பது மக்களின் வாழ்க்கையை நன்னெறிப்படுத்தும் நலன்புரிச் செயல்பாடாகவும் விளங்குகின்றது. ஆகவே அபிவிருத்தி என்பது பொருளாதாரம் சார்ந்த தலா நபர் மொத்தத் தேசிய உற்பத்திப் பெறுமதிகளின் அதிகரிப்புக்களினூடாக மாத்திரம் எடுத்துக் காட்டப்படாமல் பொருளாதாரத் தோடிணைந்த சமூக, கலாசார நவீனத்துவங்களின் தராதர உயர்வுகளுடன் எடுத்துக் காட்டப்படுதலே பொருத்தமானது எனக் கூறப்படுகின்றது.



# 2

# அபிவிருத்திப் பின்னணியில் உலக நாடுகள்

உலக நாடுகளில் அபிவிருத்தி அல்லது பொருளாதார, சமூக வளர்ச்சி என்பன அண்மையில் ஏற்பட்ட ஒன்றல்ல. அவை காலா காலங்களாக நிகழ்ந்து வந்துள்ள விளைவுகளாகும். இந்நிகழ்வு புதிய நாடுகளைக் கண்டுபிடித்தல், குடியேற்றங்களை ஏற்படுத்துதல், வர்த்தகம், நாடுகளினதும், அரசுகளினதும் விஸ்தரிப்பு, வல்லரசுகளின் வீழ்ச்சி, கைத்தொழிற் புரட்சி, விவசாயப் புரட்சி ஆகியவற்றின் மூலம் ஏற்பட்டு வந்துள்ளது. இவைகள் யாவும் ஒரு வகையான பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்திகளின் பிரதிபலிப்புக்கள் எனவும், இவ்வாறான பின்னணியில் தான் அன்று முதல் இன்று வரை உலக நாடுகள் தம்மை வேறுபடுத்திப் பிரித்துப் பார்க்க வழி செய்தன என்றும் கருதலாம்.

இன்றைய உலகில் நூற்றுக்கணக்கான அரசியல் எல்லைகளைக் கொண்ட நாடுகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் அமையத்தில் இன்று ஏறத்தாழ 184 நாடுகள் வரையில் அங்கம் வகிக்கின்றன. இந்நாடுகளுள் அதிகமானவை இரண்டாம் உலகப் போரின் பின்னர் குடியேற்ற நாட்டு ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற நாடுகளாகும். கீழ்வரும் அட்டவணை பிரதானமான சில உலக நாடுகளைக் காட்டுகின்றது.

**பிரதானமான சில உலக நாடுகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆர்ஜென்டினா | 5. | ஆஸ்திரியா |
| 2. | போட்டறிகோ | 6. | பெல்ஜியம் |
| 3. | அவுஸ்திரேலியா | 7. | டென்மார்க் |
| 4. | நியூசிலாந்து | 8. | பின்லாந்து |


9. பிரான்சு
10. ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு
11. ஐஸ்லாந்து
12. அயர்லாந்து
13. லக்ஸம்பேர்க்
14. நெதர்லாந்து
15. நோர்வே
16. சுவீடன்
17. சுவிட்சர்லாந்து
18. ஐக்கிய இராச்சியம்
19. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு
20. போலந்து
21. கனடா
22. ஐக்கிய அமெரிக்கா
23. பஹாமாஸ்
24. செக்கோஸ்லொவேக்கியா
25. அங்கோலா
26. புருண்டி
27. மத்திய ஆபிரிக்கக் குடியரசு
28. கொங்கோ
29. கபொன்
30. கானா
31. மொஸம்பிக்
32. ருவண்டா
33. ஸயர்
34. பபுவா நியூகினி
35. கொஸ்டாரிகா
36. எல்சல்வடோர்
37. ஈகுவடோர்
38. கௌதமாலா
39. ஹய்டி
40. ஹொன்டுராஸ்
41. மெக்ஸிக்கோ
42. நிகரகுவா
43. பரகுவே
44. வெனிசுலா
45. பெனின்
46. கென்யா
47. மலாவி
48. சோமாலியா
49. தென்னாபிரிக்கா
50. தன்ஸானியா
51. ஸம்பியா
52. ஸிம்பாப்வே
53. பொட்சுவானா
54. கேப்வேர்ட்
55. லெஸோதோ
56. நமிபியா
57. அல்பேனியா
58. பல்கேரியா
59. சைப்ரஸ்
60. கிரீஸ்
61. ஹங்கேரி
62. இத்தாலி
63. மோல்டா
64. போர்த்துக்கல்
65. ருமேனியா
66. ஸ்பெயின்
67. துருக்கி
68. சோவியத் ஒன்றியம்
69. யூகோஸ்லாவியா
70. அல்ஜீரியா
71. லிபியா
72. மொரோக்கோ
73. டியூனீசியா
74. அப்கானிஸ்தான்
75. மங்கோலியா
76. பாகிஸ்தான்
77. எகிப்து
78. ஈரான்
79. ஈராக்
80. இஸ்ரேல்
81. ஜோர்தான்
82. லெபனான்



83. சவூதி அராபியா
84. ஸிரியா
85. யெமன் ஜனநாயக மக்கள் குடியரசு
86. பொலீவியா
87. சிலி
88. கியூபா
89. ஜமேகா
90. பெரு
91. திரனிடாட்டும் டொபாகோவும்
92. உருகுவே
93. பார்படோஸ்
94. பிஜி
95. கிரனடா
96. செயின்ட் லூசியா
97. செயின்ட் வின்சன்டும் கிறயடைன்சும்
98. ஸமோவா
99. ஸாலோடோமேயும் பிறின்ஸிபேயும்
100. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
101. ஓமான்
102. குவைத்
103. பஹ்றைன்
104. கமரூன் லூக்கிய குடியரசு
105. சாட்
106. எதியோப்பியா
107. மாலே
108. மொறிடானியா
109. நைகர்
110. நைஜீரியா
111. செனகல்
112. சூடான்
113. டோகோ
114. உகண்டா
115. அப்பர் வோல்டா
116. யெமன் அரபுக்குடியரசு
117. வங்காளதேசம்
118. பர்மா (மியான்மார்)
119. சீனா
120. ஹொங்கொங்
121. இந்தியா
122. இந்தோனேசியா
123. ஜப்பான்
124. ஜனநாயகக் கம்பூச்சியா
125. கொரியா ஜனநாயக மக்கட் குடியரசு
126. கொரியாக் குடியரசு
127. மலேசியா
128. நேபாளம்
129. பிலிப்பைன்ஸ்
130. சிங்கப்பூர்
131. இலங்கை
132. தாய்லந்
133. வியட்னாம்
134. கினிபெசாவோ
135. கினி
136. ஐவரிகோஸ்ட்
137. லைபீரியா
138. மடகஸ்கார்
139. ஜிபோட்டி
140. மொரிசியஸ்
141. சீஷெல்ஸ்
142. சியாராலியோன
143. பிரேஸில்
144. கொலம்பியா
145. டொமினிக்கன் குடியரசு
146. கயானா
147. பனாமா

---

மூலம்:- ஐக்கிய நாடுகள் அறிக்கை - 1994



பிரதானமான சில உலக நாடுகள்



இவ்வாறான எல்லா நாடுகளும் இன்று அரசியல் ரீதியில் மாத்திரமன்றி, பொருளாதார ரீதியிலும் பிரித்து வகுத்தறியக்கூடியனவாக விளங்குகின்றன. ஒரு வகையில் இன்று உலக நாடுகள் அரசியலுடன் இணைந்த பொருளாதார அபிவிருத்திப் பின்னணியைக் கொண்டன வாகப் பாகுபட்டு நிற்கின்றன. இப்பின்னணியின் கீழ் உலக நாடு களின் அபிவிருத்தியில் இரட்டைத்தன்மையைக் காணக் கூடியதாக வுள்ளது. இவ்விரட்டைத் தன்மையின் அடிப்படையில் உலகநாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளென்றும், குறைவிருத்தி அல்லது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளென்றும் பாகுபடுத்தப்படுகின்றன.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் வேறொரு வகையில் முன்னேறிய நாடுகள், செல்வந்த நாடுகள், கைத்தொழில் நாடுகள், மைய நாடுகள், மேலைத்தேச நாடுகள், வடக்கு நாடுகள் எனவும் குறைவிருத்தி அல்லது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பின்தங்கிய நாடுகள், வறிய நாடுகள், கைத்தொழில் ஆரம்ப நிலை நாடுகள், சுற்றயல் நாடுகள், கீழைத்தேய நாடுகள், தெற்கு நாடுகள் எனவும் அழைக்கப்படுவது மரபாகிக் கொண்டு வருகின்றது.

## அபிவிருத்தி அடைந்த நாடுகள்

அபிவிருத்தி அடைந்த நாடுகள் எனக் கூறும்போது செல்வ நிலையில் மேம்பாடு கொண்டதும், கைத்தொழில் மயமானதும், உணவில் போஷணையும், தன்னிறைவும் கொண்டதுமான சூழலைப் பெற்றுள்ள நாடுகளே கருதப்படுகின்றன. வேறொரு வகையிற் கூறும்போது உலகின் மொத்தச் சனத்தொகையில் குறைந்தளவு வீதத்தினர் நிறைந்த செல்வத்தின் பூரண பயன்பாட்டையும், அதிகரித்த பயன்பாட்டையும் பெறுகின்ற தன்மை கொண்ட நாடுகள் எனச் சொல்லவும் முடியும். பொது நோக்காகப் பார்க்கும்போது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் இலட்சணங்களிலிருந்தும் முற்றும் முரணான அல்லது எதிர்மாறான தன்மைகள் இந்த அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படுகின்றன எனலாம். எனினும் மேற்கூறிய கருத்திற்கு விதிவிலக்காக ஆள்வீத மொத்தத் தேசிய உற்பத்தியின் அல்லது தலாநபர் வருமானத்தின் அடிப்படையில் மாத்திரம் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தன்மை சில அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக

ஐக்கிய அரபு எமிரேட், கட்டார், குவைத், சவூதி அரேபியா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். எனினும் இந்நாடுகள் ஏனைய துறைகளில் குறைவிருத்தித் தன்மையையே காட்டுகின்றன.

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் வரிசையில் உலகில் குறைந்தளவு எண்ணிக்கை கொண்ட நாடுகளே காணப்படுகின்றன. கீழ்வரும் அட்டவணை அபிவிருத்தி அடைந்த நாடுகளின் வரிசையைக் காட்டுகின்றது.

## உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகள்

அல்பேனியா
ஆர்மீனியா
அவுஸ்திரேலியா
அஸர்பைஜான்
ஆஸ்த்திரியா
பெலாரஸ்
பெல்ஜியம்
பல்கேரியா
கிரீஸ்
ஹங்கேரி
ஐஸ்லாந்து
அயர்லாந்து
இஸ்ரேல்
இத்தாலி
ஜப்பான்
கஸாகஸ்த்தான்
லத்வியா
லித்துவேனியா
லக்சம்பேக்
மோல்ட்டா
மோல்டோவா குடியரசு
நெதர்லாந்து
நியூஸ்லந்து

கனடா
செக்கோஸ்லோவைக்கியா
டென்டார்க்
எஸ்டோனியா
பின்லந்து
பிரான்ஸ்
ஜோர்ஜியா
ஜேர்மனி
நோர்வே
போலந்து
போத்துக்கல்
ரூமேனியா
ரஷ்ய ஒன்றியம்
ஸ்பைன்
சுவீடன்
சுவிச்சர்லந்து
தாஜிகிஸ்த்தான்
துருக்மேனிஸ்த்தான்
உக்ரைன்
ஐக்கிய ராச்சியம்
ஐக்கிய அமெரிக்கா
உஸ்பெகிஸ்த்தான்

மூலம்:- மனித அபிவிருத்திச் சுட்டிகள் ஆண்டறிக்கை - 1994





## அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள்

வறுமைத் தன்மை கொண்டதும், அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்காக மூலப் பொருள்களை வழங்குவதும், பசியாலும், மந்த போஷனையாலும் வாடுகின்ற அதிகளவிலான சனத்தொகையைக் கொண்டதுமான நாடுகளே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளெனக் கருதப்படுகின்றன. உலகின் அதிகமான அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொது இலட்சனமாக விளங்குவன பொருளாதார ரீதியில் பின்தங்கிய தன்மை, வேகமான சனத்தொகை வளர்ச்சி, குறைவான தொழில் வாய்ப்புக்கள், உணவுப்பற்றாக்குறை, சுகாதாரம் போன்ற பல்வேறு வசதியீனங்கள் ஆகியனவாகும்.

குறிப்பிடத்தக்க ஏனைய இலட்சனங்களாவன; அதிகளவில் விவசாயத்தோடு ஒட்டிய பொருளாதார அமைப்பு, ஏற்றுமதிகளில் ஏறத்தாழ $\frac{3}{4}$ பகுதிக்கு மேல் மூலப் பொருள்களாக விளங்குதல், திட்டமிடப்படாத நகர ஆக்கப்பாங்கு என்பனவாகும். இக் காரணங்களினால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்திகளின் வளர்ச்சி குறைந்த வேகத்திலேயே காணப்படுகின்றது.

இவ்வாறான அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தொகுதியின் கீழ் அண்மைக் காலங்களில் விடுதலை பெற்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளும், இரண்டாம் உலகப் போருக்கு முன்பிருந்தே சுதந்திர அரசுகளைக் கொண்டிருந்த ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளும் அடங்குகின்றன. இவ்வணியின் கீழ் இன்று ஏறத்தாழ நூற்றி இருபத்தியேழு நாடுகள் வரையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளாகக் கருதப்படுகின்றன. கீழ்வரும் அட்டவணை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வரிசையைக் காட்டுகின்றது.

### உலகின் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள்

ஆப்கானிஸ்தான்
அல்ஜீரியா
அங்கோலா
அன்டிக்வாவும் பாபுடாவும்
டொமினிக்கன் குடியரசு
ஈக்வடோர்
எகிப்து
எல்சல்வடோர்



ஆஜன்டீனா
பஹாமாஸ்
பஹ்ரைன்
வங்காளதேசம்
பாபடோஸ்
பெலைஸ்
பெனின்
பூட்டான்
பொலிவியா
பொஸ்ட்வானா
பிரேஸில்
புருணை தாருஸ்ஸலாம்
பக்கினாபேஸோ
புருண்டி
கம்போடியா
கெமரூன்
கேப்வேர்ட்
மத்திய ஆபிரிக்கக் குடியரசு
சாட்
சீனா
கொலம்பியா
கோமோரோஸ்
கொங்கோ
கொஸ்ட்டாரிகா
கோட்'டி' ஐவொயர்
கியூபா
சைப்ரஸ்
டிஜிபொவ்ட்டி
டொமினிக்கா
மலாவி
மலேசியா
மாலைதீவுகள்
மாலி
மொரிடானியா
மொரிஷியஸ்
மெக்ஸிக்கோ
ஈக்வடோரியல் கினியா
இதியோப்பியா
பியூஜி
கெபோன்
கெம்பியா
கானா
கிரெனடா
கௌத்தமாலா
கினியா
கினியா பிசோவ்
கயானா
ஹைட்டி
ஹொன்ட்ரஸ்
ஹொங்கொங்
இந்தியா
இந்தோனேசியா
ஈரான் இஸ்லாமியக் குடியரசு
ஈராக்
ஜெமெய்க்கா
ஜோர்டான்
கென்யா
கொரிய ஜனநாயகக் குடியரசு
கொரியக் குடியரசு
குவைத்
லாவோ மக்கள் ஜனநாயக் குடியரசு
லெபனான்
லெஸட்டோ
லைபீரியா
லிபிய அரபு ஜமாஹிரியா
மடகாஸ்கர்
சீராலியோன்
சிங்கப்பூர்
சொலமன்தீவு
சோமாலியா
தென்ஆபிரிக்கா

| | |
|---|---|
| மொங்கோலியா | இலங்கை |
| மொரோக்கோ | சூடான் |
| மொஸாம்பிக் | சுரினாம் |
| மியான்மார் | சுவிச்சர்லந் |
| நமீபியா | சிரிய அரபுக் குடியரசு |
| நேபாளம் | தான்சானியா ஐக்கிய குடியரசு |
| நிக்கராகுவா | தாய்லந்து |
| நைஜர் | டோகோ |
| நைஜீரியா | டிரினிடாத்தும் டொபாகோவும் |
| ஓமான் | டியூனிசியா |
| பாகிஸ்த்தான் | துருக்கி |
| பனாமா | உகண்டா |
| பப்புவாநியூகினியா | ஐக்கிய அரபு எமிரேட் |
| பரகுவே | உருகுவே |
| பேரு | வனூட்டு |
| பிலிப்பைன்ஸ் | வெனிசுவீலா |
| கட்டார் | வியட்னாம் |
| ருவன்டா | யெமன் |
| சாந்தகிட்சும் நீவிஸ்சும் | ஸயர் |
| சாந்தலூசியா | ஸாம்பியா |
| சாந்தவின்சன்ட் | ஸிம்பாவே |
| சாமோ | சாவோடோமும் பிரின்ஸிப்பும் |
| சவூதி அரேபியா | செனிகல் |
| சீசல்ஸ் | சிலி |

மூலம்:- மனித அபிவிருத்திச்சுட்டிகள் ஆண்டறிக்கை-1994

மேற்கண்ட அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் என்னும் தெளிவான பாகுபாடுகள் முன்வைக்கப்பட்டாலும், இப்பாகுபாட்டின் நிரந்தரத் தன்மைகள் பற்றி அண்மைக் காலங்களில் அறிஞர்களால் சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வந்துள்ளன. இதற்குக் காரணம் அபிவிருத்தி அடைந்த தன்மைக்கும், அபிவிருத்தி அடைந்து வரும் தன்மைக்குமிடையில் சில நாடுகள் காணப்படுவதாகும். இவற்றை இடைநிலை நாடுகள் என்றும், நடுத்தர அபிவிருத்தி நாடுகளென்றும் இனங் காட்டுவதற்கு இவ்வாய்வாளர்கள் முயன்றுள்ளனர். எடுத்துக்காட்டாக ஆஜன்டீனா, வெனிசுவீலா, நைஜீரியா போன்ற நாடுகளை அவர்கள் முன்வைக்கின்றனர்.



ஆகவே அபிவிருத்தியின் இரட்டைத்தன்மை என்பது எவ்வளவு தூரம் நிரந்தரமானது என்பது புதிய ஆய்வுகளின் முடிவிலிருந்தே தீர்மானிக்க வேண்டியுள்ளது.

இதனைத் தவிர வருமானம் உற்பத்தி அமைப்பு முறை ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகள் பாகுபடுத்தப்படுகின்றன. இவை குறைந்த வருமானப் பொருளாதார நாடுகள் (Law- income economies), நடுத்தர (மத்திம) வருமானப் பொருளாதார நாடுகள் (Middle- income economies), உயர் வருமானப் பொருளாதார நாடுகள் (High- income economies) என அழைக்கப்படுகின்றன.

## குறைந்த வருமானப் பொருளாதார நாடுகள்

இன்று உலக நாடுகளில் பல, தமது சகல உற்பத்திகள், சேவைகள் என்பவற்றின் மூலம் பெறப்படுகின்ற பண ரீதியான வருமானத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் காணப்படுகின்றன. ஒரு நாடு அரசியல் ரீதியாக வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் பெறுகின்ற வருமானத்தை அடிப்படையாகக் கொண்டே இந்நிலைமை கணிக்கப் படுகின்றது. இந்த அடிப்படையில் மிகக் குறைந்த சராசரி ஆள்வீத வருமானத்தைக் கொண்ட நாடுகள் குறைந்த வருமானப் பொருளாதார நாடுகள் எனப்படுகின்றன. உலகவங்கியின் 1994 ஆம் ஆண்டின் அபிவிருத்தி அறிக்கையின்படி 635 அமெரிக்க டொலருக்குக் குறைந்த சராசரி ஆள்வீத வருமானத்தைக் கொண்ட நாடுகள் குறைந்த வருமானப் பொருளாதார நாடுகள் எனப் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. இதற்குள் அடங்குகின்ற சகல நாடுகளும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாகவே உள்ளன. ஆகவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடொன்றின் பொருளாதார, சமூக இலட்சனங்களையே இந்நாடுகளிலும் நாம் காணலாம். கீழ்வரும் அட்டவணை உலகின் குறைந்த வருமானப் பொருளாதார நாடுகளின் வரிசையைக் காட்டுகின்றது.

### உலகின் குறைந்த வருமானப் பொருளாதார நாடுகள்

| | |
|---|---|
| ஆப்கானிஸ்தான் | மடகாஸ்கர் |
| வங்காளதேசம் | மாலாவி |

பெனின்
பூட்டான்
பக்கினாபேஸோ
புருண்டி
கம்போடியா
மத்திய ஆபிரிக்கக் குடியரசு
சாட்
சீனா
கொமோரோஸ்
ஈக்வடோரியல் கினியா
இதியோப்பியா
கெம்பியா
கானா
கினியா
கினியா-பிஸோ
கயனா
ஹைட்டி
இந்தியா
கென்யா
லாவோ மக்கள் ஜனநாயன-குடியரசு
மாலைத்தீவுக்ள்
மொரிடானியா
மாலி
மொஸாம்பிக்
மியான்மர்
நேபாளம்
நைஜர்
பாகிஸ்த்தான்
ருவன்டா
சாவோடோமும் பிரின்ஸிப்பும்
சியாராலியோன்
சோமாலியா
இலங்கை
சூடான்
தான்சானிய ஐக்கியக் குடியரசு
டோகோ
உகண்டா
வியட்னாம்
ஸயர்
ஸாம்பியா
லைபீரியா

மூலம்:- உலகவங்கியின் அபிவிருத்தி அறிக்கை - 1994

## நடுத்தர (மத்திம) வருமானப் பொருளாதார நாடுகள்

ஏறத்தாழ 636-7910 அமெரிக்க டொலர் வரையிலான சராசரி ஆள்வீத வருமானத்தைக் கொண்ட நாடுகள் நடுத்தர அல்லது மத்திம வருமானத்தைக் கொண்ட நாடுகள் என 1994 ஆம் ஆண்டின் உலக வங்கி அபிவிருத்தி அறிக்கை எடுத்துக் காட்டியுள்ளது. இந்த நடுத்தர வருமானப் பொருளாதார நாடுகளை நாம் வகுத்து நோக்கும் போது இவற்றுள் அதிகமான நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும நாடுகளாக இருப்பதோடு, கைத்தொழிலிலும், சமூக அபிவிருத்தியிலும் முன்னேறிய சில அபிவிருத்தி அடைந்த நாடுகளும் உள்ளடங்குகின்றன. இந்த அபிவிருத்தி அடைந்த நாடுகள் வருமானத்தில் நடுத்தரத்



தன்மையைக் கொண்டிருந்த போதும் அவை கொண்டிருக்கும் நடுத்தர வருமானத்தின் மூலம் அந்நாட்டு மக்கள் ஏனைய சமூக அபிவிருத்தி மட்டங்களில் மிக உயர்ந்த தன்மையைப் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். அதேநேரம் நடுத்தர வருமானத்தைப் பெறுகின்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தாம் பெறுகின்ற நடுத்தர வருமானத்தினாலும் கூட, உயர் சமூக அபிவிருத்தியைப் பெறாதவைகளாக உள்ளன. கீழ்வரும் அட்டவணை உலகின் நடுத்தர வருமானப் பொருளாதார நாடுகளின் வரிசையைக் காட்டுகின்றது.

### உலகின் நடுத்தர வருமானப் பொருளாதார நாடுகள்

அல்பேனியா
அல்ஜீரியா
அங்கோலா
அன்டிகுவாவும் பாபுடாவும்
ஆஜன்டைனா
ஆர்மேனியா
அஸர்பைஜான்
பெலாரஸ்
பெலைஸ்
பொலிவியா
பொட்ஸ்வானா
பிரேசில்
பல்கேரியா
கெமரூன்
கேப்வேர்ட்
சிலி
கொலம்பியா
கொங்கோ
கொஸ்ட்டாரிகா
கோட்'டி' ஐவொயர்
கியூபா
செக்கோஸ்லோவாக்கியா
டிஜிபோவ்ட்டி
ஹொன்ட்ரஸ்
ஹங்கேரி
இந்தோனேசியா
ஈரான் இஸ்லாமியக் குடியரசு
ஈராக்
ஜெமெய்க்கா
காஸாகஸ்த்தான்
கொரிய ஜனநாயகக் குடியரசு
கொரியக் குடியரசு
கிரிஜிஸ்த்தான்
லத்வியா
லெபனான்
லெஸட்டோ
லிபியன் அரபு ஜமாஹிரியா
லித்துவேனியா
மலேசியா
மொரிஷியஸ்
மெக்ஸிக்கோ
மோல்ட்டோவா குடியரசு
மொங்கோலியா
மொரோக்கோ
நமீபியா
நிக்கராக்குவா

டொமினிக்கா
டொமினிக்கன் குடியரசு
ஈக்வடோர்
எகிப்து
எல்சல்வடோர்
எஸ்டோனியா
பியூஜி
கெபொன்
ஜோர்ஜியா
கிரேனடா
கௌத்தமாலா
சாந்தவின்சன்ட்
சாமோ
செனிகல்
சீசல்ஸ்
சொலமன் தீவுகள்
தென் ஆபிரிக்கா
சுரினாம்
சுவாசிலந்து
சிரிய அரபுக் குடியரசு.
தாஜிகிஸ்த்தான்
தாய்லந்து
ஓமான்
பனாமா
பப்புவா நியூகினியா
பரகுவே
பேரு
பிலிப்பைன்ஸ்
போலந்து
போத்துக்கல்
ருமேனியா
ருஷ்ய சமஷ்டி
சாந்தகிட்ஸ்சும் நெவிசும்
சாந்த லூசியா
டிரினிடாத்தும் டொபாகோவும்
டியூனீசியா
துருக்கி
துருக்மேனிஸ்த்தான்
உக்ரைன்
உருகுவே
உஸ்பெகிஸ்த்தான்
வென்வாட்டு
வெனிசுவீலா
யெமன்
ஸிம்பாவே


---

மூலம்:- உலக வங்கியின் அபிவிருத்தி அறிக்கை - 1994

## உலகின் உயர் வருமானப் பொருளாதார நாடுகள்

கைத்தொழில், அல்லது மூலப்பொருள் வளம் ஆகியவற்றின் காரணமாக அபரிமிதமான வருமானத்தைப் பெறுகின்ற நாடுகளே உலகின் உயர் வருமானப் பொருளாதார நாடுகள் எனப்படுகின்றன. வருமானத்தில் அதிகரிப்புக் காணப்பட்டபோதும், வருமானத்தின் அளவுக்கேற்ப முன்னேறிய சமூக அபிவிருத்தித் தன்மைகள் சில நாடுகளில் காணப்படவில்லை. ஆனாலும் அதிகரித்த வருமானமே இங்கு கருதப்படுவதனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பல இவ்வாறான உயர் வருமானப் பொருளாதார நாடுகளாக் காணப்பட்ட





போதும் அபிவிருத்தி அடைந்து வரும் சில நாடுகளும் உயர் வருமானப் பொருளாதாரத்திற்குள் அடங்குகின்றன. 1994 ஆம் ஆண்டின் உலக வங்கி அபிவிருத்தி அறிக்கையின்படி 7911 அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட தலா வருமானத்தைக் கொண்ட நாடுகள் உயர் வருமானப் பொருளாதார நாடுகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கீழேயுள்ள அட்டவணை உலகின் உயர் வருமானப் பொருளாதார நாடுகளின் வரிசையைக் காட்டுகின்றது.

### உலகின் உயர் வருமானப் பொருளாதார நாடுகள்

| | |
|---|---|
| அவுஸ்திரேலியா | இட்டாலி |
| ஆஸ்த்திரியா | ஜப்பான் |
| பஹறாமாஸ் | குவைத் |
| பஹ்றைரன் | லக்சம்பேர்க் |
| பாபடோஸ் | மோல்ட்டா |
| பெல்ஜியம் | நெதர்லந் |
| புருணை தாருஸ்ஸலாம் | நியூஸிலந் |
| கனடா | நோர்வே |
| சைப்பிரஸ் | கட்டார் |
| டென்மார்க் | சவூதி அரேபியா |
| பின்லாந்து | சிங்கப்பூர் |
| பிரான்ஸ் | ஸ்பைன் |
| ஜேர்மனி | சுவீடன் |
| கிரீஸ் | சுவிச்சர்லாந்து |
| ஹொங்கொங் | ஐக்கிய அரபு எமிரேட் |
| ஐஸ்லந்து | ஐக்கிய ராச்சியம் |
| இஸ்ரேல் | ஐக்கிய அமெரிக்கா |

மூலம்:- உலக வங்கியின் அபிவிருத்தி அறிக்கை - 1994

அரசியல், சமூக, கலாசார அடிப்படையிலும் மற்றோர் பாகுபாடு காணப்படுகின்றது. இந்தப் பாகுபாட்டின் கீழ் நாடுகள் முதலாம் உலக நாடுகள் அல்லது முதலாளித்துவ நாடுகள் என்றும், இரண்டாம் உலக நாடுகள் அல்லது சோஷலிச (சமதர்ம) நாடுகள் என்றும், மூன்றாம் உலக நாடுகள் அல்லது அணிசேரா நாடுகள் என்றும் கருதப்படுகின்றன.



## முதலாம் உலக நாடுகள்


இந்நாடுகள் பொருளாதார ரீதியில் முதலாளித்துவ நாடுகள் என அழைக்கப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான்,ஜேர்மனி, ஐக்கிய ராச்சியம், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், இட்டாலி, கனடா, நியூஸிலந் போன்ற இன்னும் சில நாடுகள் இதற்குள் அடங்குகின்றன.

முதலாம் உலக நாடுகளின் தொகுதியில் பிரதான இடம் வகிப்பது உலக வல்லரசுகளின் பிரதான நாடான ஐக்கிய அமெரிக்காவாகும். இரண்டாம் உலகப் போரின் காலம் வரை உலக அரசியல் அரங்கிலும், போர் நடவடிக்கைகளிலும், பொருளாதார நடவடிக்கைகளிலும் பிரதான இடத்தைப் பெற்றது ஐரோப்பாவாகும். ஆனால் போரின் பின்னர் அந்த முதன்மையை ஐக்கிய அமெரிக்காவே வகித்து வருகின்றது. முதலாளித்துவ நாடுகளுக்குள் ஐக்கிய அமெரிக்கா பிரதான விவசாயப் பொருள்களின் உற்பத்தி நாடாகவும், கைத்தொழிற் பொருட்களின் அதிகளவிலான உற்பத்தி நாடாகவும் இன்று விளங்குகின்றது. முதலாளித்துவ நாடுகளின் முதன்மையான ஏற்றுமதி நாடும் இதுவாகும்.

ஜப்பான் முதலாளித்துவ நாடுகளில் இன்று இரண்டாவது முக்கிய இடத்தை வகிக்கின்றது. அத்தோடு கூடுதலான தலா நபர் மொத்தத் தேசிய உற்பத்திப் பெறுமானத்தைக் கொண்ட நாடாகவும் ஜப்பான் விளங்குகின்றது.

அடுத்ததாக ஜேர்மனி, ஐக்கிய ராச்சியம், பிரான்ஸ், இட்டாலி போன்ற நாடுகள் முக்கியம் பெறுகின்றன. ஐரோப்பாக் கண்ட நாடுகளின் மொத்தச் சனத்தொகையில் ஏறத்தாழ 65 சதவீதத்திற்கும் மேலான குடித்தொகையைக் கொண்டுள்ள இந்த நாடுகள் மேற்குலகின் பொருளாதாரத் துறை உற்பத்திகளில் கணிசமான அளவினை உற்பத்தி செய்கின்றன.

ஏனைய முதலாளித்துவ நாடுகளும் மேற்கூறிய நாடுகளை அடுத்து, பொருளாதார உற்பத்திகளிலும், ஆள்வீத மொத்தத் தேசிய உற்பத்திப் பெறுமானத்திலும், ஏற்றுமதிகளிலும் படிமுறையிலான முக்கியம் பெற்று விளங்குகின்றன.






## இரண்டாம் உலக நாடுகள்

இவை சோஷலிச நாடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன. பொருளாதார ரீதியில் சமவுடைமை அமைப்பைக் கொண்டனவாகவும், இடைநிலைப் பொருளாதார அமைப்பைக் கொண்டனவாகவும், இந்நாடுகள் விளங்குகின்றன. சோவியத் ரஷ்யா, கியூபா, சீனா, அல்பேனியா, பல்கேரியா, செக்கோஸ்லோவைக்கியா, ஹங்கேரி, போலந்து, ரூமேனியா, யூகோஸ்லேவியா, கொரிய மக்கள் குடியரசு போன்ற நாடுகள் இதனுள் அடங்குகின்றன.

உலக நாடுகளுள் ஏறத்தாழ பதினேழு நாடுகள் வரை இன்று தெளிவான சமதர்மப் பொருளாதார, சமூக அமைப்புக்களைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. உலகின் மொத்த நிலப்பரப்பில் சுமார் முப்பத்தியாறு மில்லியன் சதுரக்கிலோ மீற்றர்களையும் உலக சனத்தொகையில் ஏறத்தாழ 1400 மில்லியன் மக்களையும் இந்நாடுகள் தம்முட் கொண்டுள்ளன. உலகின் மொத்த நிலப்பரப்பில் 27 சதவீதத்தைக் கொண்ட இந்நாடுகளில் உலக சனத்தொகையில் 33 சதவீதம் வாழுகின்றனர் எனின் மிகையாகாது.

## மூன்றாம் உலக நாடுகள்

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பிலோ, சோஷலிசப் பொருளாதார அமைப்பிலோ நேரடியாகக் கூட்டுச் சேராது தனித்துவமான பொருளாதார அமைப்புக்களைக் கொண்ட நாடுகளாக மூன்றாம் உலக நாடுகள் விளங்குகின்றன. இலங்கை, இந்தியா போன்ற பல ஆசிய நாடுகளும், ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளும் இதனுள் அடங்குகின்றன. பொதுவாகக் கூறினால் உலக நாடுகளில் நூற்றுக் கணக்கான நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் எனக் கருதப்படுகின்றன. இன்னொரு வகையிற் கூறினால் அணிசேரா இயக்கத்தின் சகல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் இதனுள் அடங்குகின்றன.

மூன்றாம் உலக நாடுகளின் பொதுவான ஒரு இலட்சணமாக விளங்குவது கணிசமான காலம் வரை குடியேற்ற நாட்டாதிக்கத்தின் கீழிருந்து விடுதலை பெற்றதாகும். இவற்றுள் அதிகமானவை ஆசியாவிலும், ஆபிரிக்காவிலுமே உள்ளன. அதிகமான மூன்றாம்

உலக நாடுகள் இன்று ஒரு விதமான கலப்புப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

இவற்றோடு பிரதேசம், வலயம், நட்புறவு என்ற அடிப்படைகளில் நூற்றுக்கணக்கான பாகுபாடுகள் இன்று உலக நாடுகளிடையே காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இந்தப் பாகுபாடுகள் யாவுமே காலப் போக்கில் அபிவிருத்தியின் மாற்றம், வளர்ச்சி போன்றவற்றிற்கேற்ப மாற்றம் பெறக்கூடியனவாகும்.



# 3

# அபிவிருத்தியை அளத்தல்

## அளவீட்டு விளக்கம்

அபிவிருத்தி அளவீடென்பது உலக நாடுகளின் பல்துறை வளர்ச்சிகளின் தராதரங்களை அறிந்து கொள்வதற்கும், எதிர்காலத்தில் அந்நாடுகளின் உயர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எடுக்கப்படும் ஒரு மதிப்பீட்டு முயற்சி எனப்படுகிறது. இன்னொரு வகையிற் கூறினால் அபிவிருத்தியின் தன்மைகளை அறிய அதாவது அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் தன்மைகளை அறிய மேற்கொள்ளப்படும் ஒரு மதிப்பீடு எனவும் கூறப்படுகின்றது

இன்று அரசியல் எல்லைகளால் வரையறுக்கப்பட்ட உலக நாடுகளே அபிவிருத்தியின் அடிப்படை அலகுகளாகக் கருதப்படுவதனால் அவற்றின் வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் காணப்படும் அபிவிருத்தியின் பல்வேறு விபரங்களையும், தரவுகளையும் அறிவதற்காக எடுக்கப்படும் முயற்சி அபிவிருத்தி அளவீடு எனக் கருதப்படுகின்றது.

ஒரு நாடு பொருளாதார, சமூக, கலாசார ரீதியில் கூடிய அபிவிருத்தியைப் பெற்றுள்ளதா அன்றேல் குறைந்த அபிவிருத்தியைப் பெற்றுள்ளதா என அறிவதற்கும், முடிவுகளை எடுப்பதற்கும் துணையாகும் ஒரு மதிப்பீட்டுக் கருவி அபிவிருத்தி அளவீடாகும்.

இன்று உலக நாடுகளின் நிலைமைகளைப் பொதுவாகவும் ஒப்பீட்டு ரீதியிலும் அறிந்து கொள்வதற்கு அபிவிருத்தி அளவீடு மிக அவசியமாகவுள்ளது. ஒரு நாட்டினதும் இன்னொரு நாட்டினதும் மொத்த வருமான ஏற்றத்தாழ்வுகள், தலாநபர் வருமான ஏற்றத் தாழ்வுகள், மொத்தத் தேசிய உற்பத்தி, தேறிய தேசிய உற்பத்தி

வித்தியாசங்கள், இயற்கை வளப் பயன்பாட்டின் குறைநிறைகள், வாழ்க்கைத்தர ஒப்பீடு குறிப்பாக மக்கள் உடனலம், கல்வி, சமூக சேவை, போக்குவரத்து, சேமிப்பு, சமூகப் பாதுகாப்பு, போஷனை, வேலை வாய்ப்பு முதலிய பல்வேறு அம்சங்களினதும் ஒப்பீடு என்பவற்றை அவைகளின் உச்ச நிலைமை, குறை நிலைமை களுக்கேற்ப அறிந்து கொள்வதற்கு இந்த அபிவிருத்தி அளவீடானது மிகத் தேவையானது எனக் கூறப்படுகின்றது.

## அளத்தலின் நோக்கம்

உலகப் பிரதேசங்கள், வலயங்கள், அரசுகள், கோளார்த்தப் பகுதிகள் என்ற அடிப்படையில் பல்வேறு அபிவிருத்தி நிலைமைகளையும் அறிந்து கொள்ள விழைதல் அபிவிருத்தியை அளத்தலின் நோக்கங்களுள் ஒன்றெனக் கூறப்படுகின்றது. இன்று உலக நாடுகள் முதலாளித்துவச் சார்பு, சமவுடமைச் சார்பு, சார்பற்ற போக்கு ஆகியவற்றின் மூலம் பல்வேறு துறை அபிவிருத்திகளையும் மேற் கொண்டு வருகின்றன. இச்சார்புகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் காணப்படுகின்றன. ஆகவே இவ்வித சார்பு நிலை கொண்ட வலயங்களில், பிரதேசங்களில், அரசுகளில் சார்ந்து நிற்கும் தன்மைகள் எந்தளவில் அபிவிருத்தியை மேம்படுத்த வழி செய்துள்ளன என்பதை அறிய முனைதலும் அபிவிருத்தியை அளவிடுவதன் இன்னொரு நோக்கமெனக் கூறப்படுகின்றது.

உலக நாடுகளின் நிகழ்கால நிலையிலிருந்து அவை உயர் நிலையை அடைவதற்குப் பல்வேறு துறைகளினதும் வளர்ச்சிப் போக்குகளை அவதானித்தல் இன்றியமையாததாக விளங்குகின்றது. நாடுகளின் அபிவிருத்தித் துறைகளில் எந்தப் பிரிவுகள் பின்தங்கியுள்ளன; எந்தப் பிரிவுகளை முன்னேற்ற வேண்டும்; எந்தப் பிரிவுகளை முன்னேற்றலாம் என அறிந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிகாட்டுவது அபிவிருத்தி அளவீட்டின் மற்றொரு நோக்கமெனவும் கருதப்படுகின்றது.

## அளத்தல் முறைகளும், காரணிகளும்

அபிவிருத்தி சம்பந்தமான ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப முதலே அபிவிருத்தியை அளவிடுதலும் தொடங்கியது.



அபிவிருத்தியை அளவிடும் முறையானது ஆரம்பத்தில் பொருளியல் துறைகளிலேயே மேற்கொள்ளப்பட்டது. ஆகவே அபிவிருத்தியை அளப்பதற்குப் பொருளியற் காரணிகளே பயன்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் ஆய்வாளர் முதன் முதலாக நோக்கும்போது நேரடிப் பார்வையில் அபிவிருத்தியின் தன்மைகள் பெருவாரியாக பொருளியற்றுறைகளில் காணப்பட்டதே இதற்குக் காரணமாகும். உற்பத்தி, வருமானம், நுகர்வு முதலிய வெளிப்படையான பொருளாதாரச் சக்திகள்தான் அபிவிருத்தியின் தன்மைகளை நிர்ணயிக்கின்றன என்ற ஒரு கருத்து ஏற்பட்டதனாலேயே நீண்ட காலம் வரை அபிவிருத்தியை அளத்தல் முறை பொருளியற்றுறை சார்ந்ததாக இருக்கக் காரணமானது. ஆனால் பின்னைய ஆய்வுகளில் சமூக, கலாசார, அரசியல் துறைகளும் அபிவிருத்தியிற் செல்வாக்குக் கொண்டுள்ளன என்ற உண்மைகள் வெளிக் கொணரப்பட்டதும், அபிவிருத்தியை அளத்தல் ஏனைய துறைகளையும் இணைப்பதாக அமைந்தது. குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியிலிருந்து இற்றை வரை பல்வேறு விடயத்துறைகளின் மூலமும் அபிவிருத்தியை அளவிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஆரம்பத்தில் பொருளியற்றுறை மூலமும், பின்னர் ஏனைய விடயத்துறைகள் அடிப்படையிலும் அபிவிருத்தியை அளப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்களின் பின்னணியில் அபிவிருத்தி அளவீட்டு முறைகளை பின்வருமாறு இரு பிரிவுகளாக வகுக்கலாம்.

I. பொருளாதாரக் காரணிகளைக் கொண்ட அளவீட்டு முறைகள்
II. சமூகக்காரணிகளைக் கொண்ட அளவீட்டு முறைகள்

### பொருளாதாரக் காரணிகளைக் கொண்ட அளவீட்டு முறைகள்

அபிவிருத்தியை அளவிடும் அளவீட்டு முறையில் பிரதானமாக பொருளாதாரக் காரணிகள் முக்கியம் பெறுகின்றன. இவற்றுள் பல காரணிகள் காணப்பட்டபோதும் முக்கியமானவைகள் மூன்றாகும். அவைகளாவன:

* ஆள்வீத மொத்தத் தேசிய உற்பத்தி அல்லது மொத்தத் தேசிய உற்பத்தி
* தலா நபர் வருமானம் அல்லது ஆள்வீத வருமானம்
* மொத்தத் தேசிய உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வேகம்

## மொத்தத் தேசிய உற்பத்தியின் அடிப்படையிலான அளவீட்டு முறை

மொத்தத் தேசிய உற்பத்தியின் அடிப்படையில் அபிவிருத்தியை அளவிடும்போது பல விடயங்களை நாமறியலாம். அபிவிருத்தியை அளவிடுவதில் முதன்முதலாகக் கையாளப்பட்ட பாரம்பரிய அளவீட்டுக் காரணியாக மொத்தத் தேசிய உற்பத்தி விளங்குகின்றது. அதிகமான பொருளியலாளர்கள் ஆரம்பத்தில் அபிவிருத்தியை அளவிடும் காரணியாக மொத்தத் தேசிய உற்பத்தியைப் பயன்படுத்தியுள்ளனர். மொத்தத் தேசிய உற்பத்தி எனக் கூறும்போது ஒரு நாட்டில் குறிப்பிட்ட கால எல்லையொன்றினுள் உற்பத்தி செய்யப்பட்ட எல்லாப் பொருள்களையும், சேவைகளையும் (பணப் பெறுமதியின் அடிப்படையில்) குறிக்கும். இந்த அளவீட்டின் அடிப்படையில் ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி அதிகமாயின் அந்நாடு அபிவிருத்தி அடைந்த நாடென்றும், குறைவாயின் அபிவிருத்தி குறைந்த (அபிவிருத்தி அடைந்து வரும்) நாடென்றும் கணிக்கப்பட்டது.

மொத்தத் தேசிய உற்பத்தியின் அடிப்படையில் நாடுகளின் அபிவிருத்தியை அளப்பதற்குப் பொதுப் பண அலகே பயன்படுத்தப்படுகின்றது. அதாவது ஐக்கிய அமெரிக்க டொலரே ஏற்றுக் கொள்ளகப்பட்ட பண அலகாகப் பயன்பாட்டில் உள்ளது. ஜின்ஸ் பர்க் என்பாரின் கணிப்பின்படி 1210 கோடி அமெரிக்க டொலர் அபிவிருத்தியின் மூலமாகக் கொள்ளப்பட்டது. இந்த மூலப் பெறுமானத்திற்கு மேற்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியைக் கொண்ட நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளென்றும் அதனிலும் குறைந்த தொகையைக் கொண்ட நாடுகள் விருத்தி குறைந்த (அபிவிருத்தி அடைந்து வரும்) நாடுகள் என்றும் அவர் கணித்தார். ஜின்ஸ் பர்க்கினால் கொடுக்கப்பட்ட பெறுமான ரீதியில் இந்தியா, சீனா போன்ற நாடுகளை நோக்கினால் ஜப்பான், கனடா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளெனக் கூறப்படுவனவற்றைப் பார்க்கிலும் கூடுதலான மொத்தத் தேசிய உற்பத்தி மூலப் பெறுமானங்களைக் கொண்டிருப்பதனை அவதானிக்கலாம். ஜின்ஸ் பர்க்கின் கருத்துக்கள் வெளியிடப்பட்ட 1961 ஆம் ஆண்டில் ஜப்பானின் மொத்தத் தேசிய உற்பத்தியின் மூலப் பெறுமானம் 2130 கோடி அமெரிக்க டொலராகக் காணப்பட இந்தியாவின் மொத்தத் தேசிய உற்பத்தியின் மூலப் பெறுமானம் 2740 கோடி அமெரிக்க டொலராக இருந்தது. இந்த அடிப்படையில் நோக்கினால் ஜப்பான், கனடா போன்ற நாடுகளை விட இந்தியா, சீனா போன்ற நாடுகள் அபிவிருத்தியிற் கூடிய



நாடுகளெனக் கருத வேண்டியேற்படும். ஆனால் நிலைமை அவ்வாறாக இருக்கவில்லை.

இங்கு முக்கிய ஒரு விடயத்தை நாம் மனதிற் கொள்ள வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி மதிப்பிடப்படுவது அந்நாட்டின் பரப்பெல்லையின் விசாலத்திற்கேற்ப மொத்தமாக வாழும் மக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், சேவைகள் ஆகியவற்றின் அடிப்படையிலாகும். இந்த வகையில் இந்தியா, சீனா போன்ற நாடுகளில் மிகப் பெரிய நிலப்பரப்பில் மிகக் கூடுதலான மக்கள் வாழ்கின்றனர். இதனால் அந்நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்திகளும், பெறுமதிகளும் தொகையளவில் அதிகமாகக் காணப்படலாம். அதே நேரம் ஜப்பானிலும், ஐரோப்பாவிலுமுள்ள சிறிய அரசியல் எல்லைகளைக் கொண்ட, குறைவான சனத்தொகையைக் கொண்ட நாடுகளிலும் மொத்தத் தேசிய உற்பத்தி குறைவாகக் காணப்படலாம். இதிலிருந்து மொத்தத் தேசிய உற்பத்திப் பெறுமானத்தின் மூலம் அபிவிருத்தியை அளவிடுவதிலுள்ள குறைபாடு புலனாகின்றது.

மேற்காட்டிய குறைபாடுகளைத் தவிர ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியைக் கணிக்கும்போது சரியான தரவுகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கல்கள் அந்நாட்டின் அளவீட்டுத் தரவுகளை நம்பகரமற்றதாக்கி விடுகின்றன. குறிப்பாக விலைத்தளம்பல்கள், காலநிலை மாற்றங்கள் ஆகியன பெறுமதிக் கணிப்பில் தடையை ஏற்படுத்துவதுடன்; நவீன முறைகளும், பாரம் பரிய முறைகளும் காணப்படும் நாடுகளில் நுகரும் பொருள்களின் உற்பத்திப் பெறுமானம் முழுமையாக மொத்தத் தேசிய உற்பத்தியிற் சேர்வதில்லை. உதாரணமாக விற்பனைக்குச் செல்லாத பொருள்கள், சேவைகள், வேதனமின்றிச் செய்யப்படும் சுயதொழில்கள், நுகர்வுக்கான வீட்டுத் தோட்ட உற்பத்திகள், வீட்டு வேலைகள் ஆதியன இந்த மதிப்பீட்டில் அடங்குவதில்லை. இவ்வாறான குறைபாடுகளின் காரணமாகப் பின்னைய நிலைமைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியை விட அபிவிருத்தியை அளப்பதற்குத் தலா நபர் வருமானம் சிறந்ததெனக் கருதப்பட்டது.

## தலா நபர் வருமான அடிப்படையிலான அளவீட்டு முறை

தலா நபர் வருமான அல்லது ஆள்வீத வருமான அடிப்படையிலும் அபிவிருத்தியை அளவிடலாமென்பது பின்னர் கைக்கொள்ளப்பட்ட ஒரு முறையாகும். தலா நபர் வருமானமென்பது ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியின் பெறுமதியை அந்நாட்டின் மக்கட் தொகையால் பிரித்துப் பெறப்படுவதாகும். மொத்தத் தேசிய உற்பத்தியின் மூலம் அபிவிருத்தியை அளவிடுவதனைவிட தலா நபர் வருமானத்தின் மூலம் அபிவிருத்தியை அளவிடுவது அபிவிருத்தியைத் தூண்டுவதில் மிகப் பொருத்தமானது எனக் கருதப்படுகின்றது. இதன்படி அதிகரித்த தலா நபர் வருமானத்தைக் கொண்ட நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளென்றும் குறைந்த தலா நபர் வருமானத்தைக் கொண்ட நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்றும் கூறப்படுகின்றது.

இங்கும் ஒரு முக்கிய பிரச்சினை எழுகின்றது. அதாவது அபிவிருத்தியை நிர்ணயிக்கும் தலா நபர் வருமானத்தின் அளவு எவ்வளவு எனத் தீர்மானிப்பதாகும். ஆரம்ப காலத்தில் ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, மேற்கைரோப்பிய நாடுகள் என்பவற்றின் தலா நபர் வருமானத்தை விடக் குறைந்த தலா நபர் வருமானத்தைக் கொண்ட நாடுகள் அபிவிருத்தி குன்றிய நாடுகள் (அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள்) எனவும், அதற்குச் சமமாக அன்றேல் மேலாகத் தலா நபர் வருமானத்தைக் கொண்ட நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளெனவும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி பற்றிய பட்டர்ஸன் அறிக்கைகளில் எடுத்துக் காட்டப்பட்டன. இவ்விதமான கருத்தொன்றையே சாமுவேல்ஸன் என்பாரும் வெளியிட்டார். இக்கருத்துக்களிலும் தலா நபர் வருமானத்தின் அபிவிருத்திக்கான தொகை எவ்வளவென எடுத்துக் காட்டப்படவில்லை.

மேற்கூறியதிலும் ஒருபடி மேற்சென்று ஜின்ஸ் பேர்க் தனது கருத்தை வெளியிட்டார். அதாவது 200 அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட தலா நபர் வருமானத்தையுடைய நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளென்றும், அதற்குக் குறைந்த தலா நபர் வருமானத்தைக் கொண்ட நாடுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளெனவும் கருத்து வெளியிட்டார். இது பின்னர் இன்னும் சில ஆய்வாளர்களினால் 500 அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட தொகையாக இருக்க



வேண்டுமெனவும் வரையறை செய்து காட்டப்பட்டது. எவ்வாறாயினும் இவைகள் யாவுமே இன்று அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பொருத்தமான முறைகளாக அமையவில்லை. ஏனெனில் இன்று மிகக் கூடிய தலா நபர் வருமானங்களைக் கொண்ட நாடுகளாக அபிவிருத்தி குறைந்தவை எனக் கருதப்படும் மத்திய கிழக்கு நாடுகள் விளங்குகின்றன. உலகத்திலேயே கூடிய தலா நபர் வருமானமாக 1980 ஆம் ஆண்டில் 30070 அமெரிக்க டொலர்களைக் கொண்டதாக ஐக்கிய அரபு எமிரேட் விளங்கியது. இது அபிவிருத்தி அடைந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்கவின் தலா நபர் வருமானத்தைவிட இரண்டு மடங்கிற்கும் மேலான அதிபரிப்பையும், ஜப்பானை விட மூன்று மடங்கிற்கும் மேலான அதிபரிப்பையும் அதே ஆண்டில் கொண்டிருந்தது. ஆனால் ஐக்கிய அரபு எமிரெட் ஏனைய பண்பியல் குறிகாட்டிகளின் அடிப்படையில் அவ்வாண்டில் கீழ்மட்ட அபிவிருத்தியையே கொண்டிருந்தது. இதேபோன்று தொடர்ந்து வரும் சில ஆண்டுகளில் இன்னும் பல்வேறு தரத்திலான நாடுகள் பலவற்றினை தலா நபர் வருமானத்தின் அடிப்படையில் பின்வருமாறு காணலாம்.

| நாடுகள் (தரத்தின் அடிப்படையில்) | ஆண்டுகளின் தலா நபர் வருமானம் (ஆள் வீத வருமானம்) US $ | | |
|---|---|---|---|
| | 1984 | 1988 | 1992 |
| **குறைந்த வருமான நாடுகள்** | | | |
| இத்தியோப்பியா | 110 | 120 | 110 |
| வங்காள தேசம் | 130 | 170 | 220 |
| இந்தியா | 260 | 340 | 310 |
| சீனா | 310 | 330 | 470 |
| இலங்கை | 360 | 420 | 540 |
| சூடான் | 360 | 480 | - |
| மாலி | 140 | 230 | 310 |
| நேபாளம் | 160 | 180 | 170 |
| மியான்மார் | 180 | - | - |

| | 1984 | 1988 | 1992 |
|---|---|---|---|
| **மத்திய வருமான நாடுகள்** | | | |
| பிலிப்பைன்ஸ் | 660 | 630 | 770 |
| தாய்லந் | 860 | 1000 | 1840 |
| மலேசியா | 1980 | 1240 | 2790 |
| மெக்சிக்கோ | 2040 | 1760 | 3470 |
| **உயர் வருமான எண்ணெய் ஏற்றுமதி நாடுகள்** | | | |
| சவூதி அரேபியா | 10530 | 6200 | 7510 |
| குவைத் | 16720 | 13400 | - |
| ஐக்கிய அரபு எமிரேட் | 21920 | 15770 | 22020 |
| **கைத்தொழில் நாடுகள் (சந்தைப் பொருளாதாரமுட்பட)** | | | |
| சுவிச்சர்லந்து | 16339 | 27500 | 36080 |
| ஐக்கிய ராச்சியம் | 8570 | 12810 | 17790 |
| பிரான்ஸ் | 9760 | 16090 | 22260 |
| அவுஸ்திரேலியா | 11740 | 12340 | 17260 |
| ஜப்பான் | 10630 | 21020 | 28190 |
| கனடா | 13280 | 16960 | 20710 |
| ஐக்கிய அமெரிக்கா | 15390 | 19840 | 23240 |

**மூலம்: உலக அபிவிருத்தி அறிக்கை - 1986, 1990, 1994**

முன்கூறிய காரணங்களைவிட தலா நபர் வருமான அடிப்படையில் நாடுகளின் அபிவிருத்தியை மதிப்பது வேறொரு வகையிலும் பொருத்தமற்றுக் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் தலா நபர் வருமானமெனக் கூறும்போது அந்நாட்டிலுள்ள யாவரும் சமமாக ஒரே அளவாக வருமானத்தைப் பெறுவதென்பதே அளவீட்டின்



அடிப்படையில் கருதப்படுவதாகும். ஆனால் உண்மையின்படி உலக நாடுகளில் எங்குமே இவ்வாறான சமமான வருமானப் பங்கீடு காணப்படவில்லை. மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகமாகக் கொண்டுள்ள நாடுகளில் - குறிப்பாக எண்ணெய் வள நாடுகளில் மிகக் குறைந்த வருமானத்தைப் பெறும் மக்கள் தொகையினர் அதிகளவில் காணப்படுகின்ற அதே நேரம் அபரிமிதமான வருமானத்தைப் பெறுவோர் மிகச் சிறு தொகையினராக உள்ளனர். உதாரணமாக லிபியாவின் மொத்த மக்களில் ஏறத்தாழ 60% மானோர் மொத்த வருவாயில் 2%ஐ மட்டுமே பெறுகின்றனர் என்றும், ரொடீசியாவில் 95% மான மக்கள் மொத்த வருமானத்தில் 40%ஐப் பெறுகின்றனர் என்றும் கடந்தகாலப் புள்ளிவிபர அறிக்கைகள் எடுத்துக் காட்டியுள்ளன.

தலா நபர் வருமானம் இன்னும் பல்வேறு காரணங்களினால் எப்போதும் சரியான முறையில் மதிப்பீடு செய்யக்கூடியதாகவும் இல்லை. மொத்தத் தேசிய உற்பத்தி மதிப்பீடுகளில் தவறிவிடுகின்ற பொருள்கள், சேவைகள், சுயதொழில்கள் ஆகியன தலா நபர் வருமான மதிப்பீட்டையும் பாதிக்கின்றன. அத்துடன் தலா நபர் வருமானத்திற்குச் சமனாக எல்லா நாடுகளிலும் சகல துறைகளிலும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு ஏற்படுவதில்லை. இதனால் நாடுகளுக்கிடையே வருவாய் - செலவு மட்டங்கள் ஒரே வகையிலன்றி வித்தியாசமாக இருப்பதனால் தலா நபர் வருமான ரீதியில் அபிவிருத்தியை அளவிடுவது சிக்கலை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகின்றது. ஆகவே பின்னைய நிலைகளில் அபிவிருத்தியை அளவிடுவதற்கு மொத்தத் தேசிய உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வேகம் பொருத்தமுடையதாகக் கொள்ளப்பட்டது.

**மொத்தத் தேசிய உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வேக அடிப்படையிலான அளவீட்டு முறை**

மொத்தத் தேசிய உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வேக அடிப்படையை நோக்கும் போது, இது ஒரு நாட்டில் குறித்த ஒரு கால எல்லையுள் தலா நபர் வருமானம் அல்லது மொ.தே.உ.எந்தளவு வீதத்தில் அதிகரித்துள்ளது என்பதைக் குறிக்கின்றது. இதன் மூலம் ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடலாம் எனக் கருதப்பட்டது. இங்கு மொத்தத் தேசிய உற்பத்திகளின் சராசரி வளர்ச்சி வேகத்தை

அதிகளவில் கொண்ட நாடுகள் அல்லது ஒரு வரையறைக்குட்பட்ட அளவில் கொண்ட நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளென்றும், குறைந்த அல்லது குறித்த வரையறைக்குக் கீழ்மட்டத்தைக் கொண்ட வளர்ச்சி வேகத்தையுடைய நாடுகள் அபிவிருத்தி குன்றிய நாடுகள் எனவும் கருதப்பட்டது. இந்தக் கருத்தின்படி நோக்கினால் குறித்தவொரு கால எல்லைக்குள் ஒரே அளவான வீதாசார வளர்ச்சியைக் கொண்ட நாடுகள் யாவுமே ஒன்றுக்கொன்று சமவளர்ச்சி பெற்றவை எனக் கருத வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்த எண் முறையிலான கணிப்பு அபிவிருத்தியை எடுத்துக் காட்டுவதற்கு எந்தளவு உசிதமென்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். பின்வரும் அட்டவணையின் மூலம் மேற்கூறிய கருத்தின் உண்மைத்துவத்தைச் சீர்தூக்கிப் பார்க்க முடியுமாகும்.

| நாடுகள் | 1979 – 1980 ஆம் ஆண்டு களுக்கிடையிலான தலா நபர் வருமான அதிகரிப்பு (அமெரிக்க டொலரில்) | மொ.தே.உற்பத்தி யின் சராசரி வளர்ச்சி வேகம். |
|---|---|---|
| குவைத் | 2320 | 10.2% |
| ஐக்கிய அமெரிக்கா | 750 | 6.6% |
| ஐக்கிய ராச்சியம் | 530 | 6.7% |
| ஜப்பான் | 1020 | 10.4% |
| இந்தியா | 30 | 12.4% |
| இலங்கை | 40 | 14.8% |

மூலம்: உலக வங்கி அட்லஸ் – 1981

இங்கு சில நாடுகள் வீதாசார அடிப்படையில் வளர்ச்சி வேகத்தில் அதிகரிப்பைக் காட்டினாலும் பெறுமானத் தொகையின் அடிப்படையில் குறைந்த வளர்ச்சி வேகத்தையே காட்டுகின்றன. குவைத்தின் 10.2%வளர்ச்சி வேகத்திற்கு 2320 அமெரிக்க டொலர்கள காணப்படும் அதேநேரம் ஜப்பானின் 10.4% வளர்ச்சி வேகத்திற்கு 1020 அமெரிக்க டொலர்களும், இந்தியாவின் 12.5% வளரச்சி வேகத்திற்கு 30 அமெரிக்க டொலர்களும், இலங்கையின் 14.8% வளர்ச்சி வேகத்திற்கு 40 அமெரிக்க டொலர்களும் மாத்திரமே



காணப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவின் 6.6% வளர்ச்சி வேகத்திற்கும், ஐக்கிய ராச்சியத்தின் 6.7% வளர்ச்சி வேகத்திற்கும் முறையே 750, 530 டொலர்கள் காணப்படுகின்றன. இங்கும் மொத்தத் தேசிய உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வேகத்தின் மூலம் அபிவிருத்தியை அளவிட முடியுமென்பது பொருத்தமானதாகத் தெரியவில்லை. ஏனெனில் நாடுகளிடையே பெறுமான அடிப்படையில் மிகப் பெரிய வித்தியாசம் காணப்படுவதாகும். அதாவது ஜப்பானின் 10.4% வளர்ச்சியில் ஏற்பட்ட பெறுமதி 1020 டொலர்கள். இந்தியாவின் 12.5% வளர்ச்சியில் அதிகரித்தது 30 டொலர்கள் மட்டுமே. ஆகவே தொகை அளவில் இருநாடுகளுக்கிடையிலான வித்தியாசம் 990 டொலர்களால் வேறுபடுகின்றது.

மொத்தத் தேசிய உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வேகம் அதிகரிக்கும் போது அபிவிருத்தி அடைந்த தன்மை ஏற்படுகின்றது எனக் கூறுவதும் பொருத்தமானதாக அமையவில்லை. ஏனைனில் 1979/80 ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஐக்கிய அரபு எமிரேட்டின் சராசரி வளர்ச்சி வேகம் 22.1% (6660 டொலர்கள்) ஆல் அதிகரித்தாலும் இக்காலப் பகுதியில் அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் உயர்ச்சி ஏற்படவில்லையென்பது பண்பியல் குறிகாட்டிகளின் மூலம் தெரிய வருகின்றது. ஆகவே தலா நபர் வருமான வளர்ச்சி வேகத்தைக் கொண்டு அபிவிருத்தியை அளவிடுவதும் பொருத்தமற்றதெனக் கருதப்பட்டது.

இவ்வாறு பொருளாதார அளவீட்டு முறைகளை மட்டும் வைத்து அளவிடுவதன் குறைபாடுகள் காரணமாக பின்னர் அபிவிருத்தியை அளவிடுவதற்கு சமூகக் காரணிகளைக் கொண்ட அளவீட்டு முறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

## சமூகக் காரணிகளைக் கொண்ட அளவீட்டு முறைகள்

பொருளாதார அளவீட்டு முறையினால் மாத்திரம் அபிவிருத்தியின் பண்பியல் சார் தன்மைகள் பிரதிபலிக்கப்படவில்லை என்றதனால் முதலாம், இரண்டாம் அபிவிருத்தித் தசாப்தங்களில் அபிவிருத்தியைச் சரியான முறையில் அளவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பின்னணியில் தான் சமூக அம்சங்களும் ஏனைய பல அம்சங்களும் அபிவிருத்தி அளவீட்டில் அதிகளவில் இடம் பெற்றன. அவற்றுச் சிலவற்றைப் பின்வருமாறு வகுக்கலாம்.

* சனத்தொகையும் அதனுடன் தொடர்புடைய தரவுகளும் (பிறப்பு இறப்பு வீதங்கள், சனத்தொகை வளர்ச்சி வேகம்) (உணவு நுகர்வின் நாளாந்த தலா நபர் கலோரிப் பெறுமானம்)
* மூலவளப் பயன்பாடு (நிலப் பயன்பாடு, இரும்பு, உருக்குப் பயன்பாடு)

* போக்குவரத்தும், சர்வதேசத் தொடர்புகளும் (வாகனங்களின் தொகை, சர்வதேச வர்த்தக வீதாசாரங்கள்)

* தொழினுட்பமும், கைத்தொழிலாக்கமும் (வலுநுகர்வு, உரப் பயன்பாடு)

* கல்வி (எழுத்தறிவு)

* சுகாதாரமும் போஷாக்கும்

* ஓய்வு நேரத்தைக் கழித்தல்

இவ்வாறான பாரம்பரியமற்ற காரணிகளைக் கொண்டு அளவிடும் முறைகள் பல்வேறு காலங்களில் பல ஆய்வாளர்களினாலும், சர்வதேச தாபனங்களினாலும் முன்வைக்கப்பட்டன.

1961 ஆம் ஆண்டில் நோட்டன் ஜின்ஸ்பேக் மேற்கூறிய பல குறிகாட்டிகளின் துணையோடு அபிவிருத்தியை அளவிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

1965 ஆம் ஆண்டில் அடல்மன், மொரிஸ் ஆகியோர் பொருளாதார, அரசியல் முறைமைகள், பலவித நிறுவன, சமூகக் குறிகாட்டிகள் ஆகியவற்றின் மூலம் அபிவிருத்தியை அளவிட முயற்சியெடுத்தனர்.

1969 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சமூக அபிவிருத்தி ஆய்வுகளும் அபிவிருத்தியை அளப்பதற்கான பல்வேறு குறிகாட்டிகளை எடுத்துக் காட்டின.

இவ்வாறு பாரம்பரியமற்ற முறையிலான ஏராளமான குறிகாட்டிகளை அபிவிருத்தியை அளப்பதற்காகப் பயன்படுத்தலாம் எனக் கருதப்பட்டாலும்; அவற்றின் அளவீட்டு முறைகளிலும்,



முடிவுகளிலும் மேலும் பல சிக்கல்கள் காணப்பட்டன. இங்கு உதாரணத்திற்காக பாரம்பரியமற்ற குறிகாட்டிகளுள் ஒன்றான உணவு நுகர்வில் நாளாந்தம் ஒரு மனிதன் சராசரியாக நுகரும் கலோரிப் பிரமாண அளவீட்டு முறையை அவதானிக்கலாம்.

**நாளாந்த தலா நபர் உணவுநுகர்வு அடிப்படையிலான அளவீட்டு முறை**

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மனித வளம் அவசியம் எனக் கருதப்படுகின்றது. சனத்தொகை வளமாகப் பயன்பட வேண்டுமாயின் மனிதன் உழைக்கும் திறன் வாய்ந்தவனாக இருத்தல் வேண்டுமெனக் கருதப்படுகின்றது. உழைக்கும் திறனைப் பெறுவதற்கு ஒருவனுக்கு ஆரோக்கியம் இன்றியமையாததாகும். ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு அவன் உண்ணும் உணவில் ஊட்டமும், சக்தியும், நிறைவும் அவசியமாகும் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறான ஒரு தன்மை பூரணமாக ஒரு நாட்டில் கிடைக்கும்போது உழைக்கும் திறன் அதிகரித்து பொருள்களினதும், சேவைகளினதும் திறமையானதும், அதிகமானதுமான ஒரு வளர்ச்சி ஏற்படுமென்றும் இது அந்நாட்டின் அபிவிருத்தி வளர்ச்சியைக் காட்டுமென்றும் கூறப்படுகின்றது. இவ்வாறின்றி ஒரு நாட்டின் மக்கட் தொகையில் அதிகமானோர் மந்த போஷணையால் வாடும்போது அந்நாட்டின் அபிவிருத்தியும் கீழ் மட்டத்தையே அடையும் எனக் கருதப்படுகின்றது. இவ்வாறான நிலைமை இன்று எல்லா அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் காணப்பட்டாலும், எந்த நாடுகளில் சத்துணவை அதிகமாக உட்கொள்வதில் வளர்ச்சி காணப்படுகின்றதோ அதனை அபிவிருத்தியின் வளர்ச்சியாகக் கொள்ள முடியும் எனக் கூறப்படுகின்றது.

இந்த அடிப்படையில் அபிவிருத்தியை அளவிடுவதற்காக நாளாந்தம் ஒருவன் உட்கொள்ளும் சராசரி கலோரிப் பிரமாணம் அளவு கருவியாகக் கொள்ளப்பட்டது. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உணவு விவசாய நிறுவனம் ஒரு மனிதனின் நிறை உணவுக் கலோரி ஏறத்தாழ 2365 கிராம்கள் என மதிப்பிட்டுள்ளது. ஆனாலும் உலக நாடுகள் அதிகமானவற்றில் இந்த அளவைவிடக் குறைவாகவே உட்கொள்ளப்படுவதனைக் காணக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இது குறைவாகக் காணப்படுவதுடன், தலா நபர் வருமானத்தில் மிக அதிகரிப்பைக் கொண்ட சில எண்ணெய் வள நாடுகளிலும், அபிவிருத்தி அடைந்த

ஜப்பானிலும் கூட ஏனைய அபிவிருத்தி அடைந்த கைத்தொழில் நாடுகளின் தலா நபர் கலோரி நுகர்வைவிடக் குறைந்த அளவே நுகரப்படுகின்றது. இதனைப் பின்வரும் தரவுகளைக் கொண்டு அறியலாம்.

| நுகர்வுத் தரம் | நாடுகள் | நாளாந்தம் நுகரும் தலாநபர் கலோரி அளவு(கிராம்களில்) 1979/1985 ஆம் ஆண்டு |
|---|---|---|
| குறைவான நுகர்வு நாடுகள் | எதியோப்பியா | 2145 |
| | சாட் | 1829 |
| | மேற்கு வோல்ட்டா | 1875 |
| | மொஸாம்பிக் | 1881 |
| | கினி | 1880 |
| | மொரிட்டானியா | 2072 |
| | தான்சானியா | 1955 |
| | பூட்டான் | 2082 |
| | வங்காளதேசம் | 1837 |
| | இந்தியா | 2056 |
| | இலங்கை | 2255 |
| கூடிய நுகர்வு நாடுகள் | மக்கள் சீனக் குடியரசு | 2426 |
| | சவூதி அரேபியா | 2947 |
| | ஜப்பான் | 2832 |
| | லிபியா | 3612 |
| | ஐக்கிய ராச்சியம் | 3249 |
| | மேற்கு ஜேர்மனி | 3351 |
| | அவுஸ்திரேலியா | 3055 |
| | சுவிச்சர்லந்து | 3455 |
| | ஐக்கிய அமெரிக்கா | 3641 |

மூலம்: உலக வங்கி அட்லஸ் - 1986

மேற்காட்டிய அடிப்படையில் தலா தனி நபர் நுகர்வுகளைக் கணித்தாலும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் பலவற்றிற்கூட நகர,



கிராமிய மக்களிடையே நுகர்வின் அளவில் வித்தியாசம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மந்த போஷணையை அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் கிராமிய மட்டத்திலும் கூடக் காணக் கூடியதாகவுள்ளது. ஆகவே ஒரு நாட்டின் எல்லா மக்களும் ஒரே மாதிரியான நுகர்வைப் பெறுகின்றனர் எனக் கொண்டு அளவிடுவதும் என்றும் பொருத்தமானதாகக் காணப்படவில்லை எனப்படுகின்றது.

இன்னொரு உண்மையையும் இங்கு அவதானிக்க வேண்டியுள்ளது. அதாவது எல்லா மனிதருக்கும் ஒரே அளவான நிறை உணவு தேவை என்பதே அதுவாகும். ஆனால் நடைமுறையில் அது பொருத்தமானதாக அமையவில்லை. உடற் நிரமத்தின் மூலம் பாடுபட்டு வேலை செய்யும் ஒரு தொழிலாளிக்குத் தேவையான கலோரிப் பிரமாணத்தை விடக் குறைந்தளவு கலோரிப் பிரமாணமே சாதாரண உழைப்பாளியான எழுதுவினைஞர்களுக்குத் தேவைப்படுகின்றது. இதேபோன்று உழைப்பில் ஈடுபடாத மக்கள், பெண்கள், முதியோர்கள், குழந்தைகள், நீண்டகால நோயாளிகள், ஆகியோரின் நாளாந்த நிறை உணவு நுகர்வு வித்தியாசப்படுகின்றது. இவற்றைக் கொண்டு நோக்கும்போது அபிவிருத்தியை அளவிடுவதில் இந்தக் குறிகாட்டியையும், இதுபோன்ற ஏனைய குறிகாட்டிகளையும் பயன்படுத்துவதில் சிக்கல்கள் நிறைந்து காணப்படுகின்றன என்பதை உணரலாம்.

அபிவிருத்தியை அளவிடுவதில் மிகவும் பொருத்தமான ஒரு முறையை அறிந்து கொள்வதற்காக 1977ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் தாபனம் புதிய ஆய்வுகளை மேற்கொண்டது. இந்த ஆய்வின் பெறுபேறாக பௌதிக வாழ்க்கைப் பண்புச்சுட்டி (பௌதிக வாழ்க்கைத் தரக் குறிகாட்டி) மிகவும் பொருத்தமான அபிவிருத்தி அளவீட்டுக் காரணியாகக் கொள்ளப்பட்டது.

## பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டியின் அடிப்படையிலான அளவீட்டுமுறை

வாழ்க்கைத் தரத்தின் வளர்ச்சியை ஒரு தனிக் குறிகாட்டி மூலம் (சனத்தொகை வளர்ச்சி அல்லது நாளாந்த உணவு நுகர்வு) அளவிட இயலாது எனக் கருதப்பட்டதனால் தலாவருமானத்தையும்

ககுறிகாட்டிகளுடன் இணைத்து ஒப்பிட்டு அபிவிருத்தியை அளவிடும் முயற்சியாக பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டி கருதப்பட்டது. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சமூக அபிவிருத்தி அளவாய்வு நிறுவனம் இதற்காக பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு, சிசு மரண வீதம், எழுத்தறிவு வீதம் ஆகிய மூன்று குறிகாட்டிகளையும் அடிப்படையாகக் கொண்டது. இவற்றின் அளவுகளைக் கொண்டு நூற்று வீத அடிப்படையில் பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டி கணிக்கப்பட்டது. இவ்வாறு நூற்று வீத அடிப்படையில் கணிக்கப்படும்போது எழுத்தறிவு வீதத்தரவுகள் உரியவாறே இருக்க பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு, சிசு மரணவீதம் ஆகியவற்றின் தரவுகள் உச்சப்புள்ளிகள், குறைந்த புள்ளிகள் என்ற அடிப்படையில் தரவு நிரைப்படுத்தப்பட்டு பின்னர் மூன்று குறிகாட்டிகளினதும் இடையைக் கொண்டு பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டி பெறப்படுகிறது. இதனைப் பின்வரும் உதாரணத்தின் மூலம் கண்டு கொள்ளலாம்.

உதாரணமாக 1950 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு அவ்வாண்டின் குறைந்த தரவுகளையும் 2000 ஆம் ஆண்டில் எதிரபார்க்கும் மிக உயர்ந்த தரவுகளையும் எடுத்து ஆராய்ந்தால் முதலில் பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பினை 0 - 100 வரையுள்ள வீதாசார அளவுத்திட்டத்தின் மூலம் தரவு நிறைப்படுத்திக் கொள்ள வேண்டும். 1950 ஆம் ஆண்டில் உலக நாடுகள் மிகக் குறைந்த ஆயுள் எதிர்பார்ப்பு அடிப்படையில் 38 வருட வயதைக் கொண்ட குறைந்த ஆயுள் வியட்நாமிலேயே காணப்பட்டது. அதே நேரம் 2000 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும் உத்தேச ஆயுள் 77 வருடமாகும். இங்கு குறைந்த ஆயுளான 38 வருடத்தை 0 ஆகவும், உயர்ந்த உத்தேச ஆயுளான 77 வருடத்தை 100 ஆகவும் கொண்டு நிரைப்படுத்தப்பட்ட தரவினைப் பெறலாம். இந்த நிரைப்படுத்தப்பட்ட தரவினை அடிப்படையாகக் கொண்டு வேறொரு நாட்டின் பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டியைக் காணலாம். நிரைப்படுத்தப்பட்ட ஆயுள் எதிர்பார்ப்புத் தரவு பின்வருமாறு அமையும்.

$$\frac{77-38}{100-0} = \frac{39}{100} = 0.39$$

இதேபோன்று சிசு மரண வீதத்திற்கான நிறைப்படுத்தப்பட்ட தரவினையும் காணலாம்.



1950 ஆம் ஆண்டில் உலக நாடுகளில் மிகக் கூடுதலான சிசு மரணவீதம் கெபோன் (Gabon) நாட்டில் 100க்கு 229 ஆகக் காணப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும் சிசு மரண வீதம் 1000க்கு 7 ஆகும். இங்கு ஆகக்கூடிய சிசு மரணமான 229ஐ 0 ஆகவும், ஆகக்குறைந்த சிசு மரணமான 7ஐ 100 ஆகவும் கொண்டு நிரைப்படுத்தப்பட்ட தரவினைப் பின்வருமாறு காணலாம்.

$$\frac{229-7}{0-100} = \frac{222}{100} = 2.22$$

எழுத்தறிவு வீத அடிப்படையில் தரப்படுவதால் நிறைப்படுத்தப்பட வேண்டியதில்லை.

இந்த மூன்று தரவுச் சுட்டிகளையும் இணைத்து ஒரு நாட்டின் பௌதிக வாழ்க்கைப் பண்புச்சுட்டியைப் பின்வருமாறு பெறலாம். உதாரணமாக ஒரு நாட்டின் குறித்த ஒரு காலத்தின் ஆயுள் எதிர்பார்ப்பு 90 வருடங்களெனவும், சிசு மரணவீதம் 1000க்கு 44 எனவும், எழுத்தறிவு வீதம் 70 எனவும் கொண்டால் அந்நாட்டின் பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டி பின்வருமாறு அமையும்.

$$\frac{90-38}{0.39} + \frac{229-44}{2.22} + 70 = 95.5 = 96$$

இவ்வாறு பெறப்பட்ட பல நாடுகளுக்கான பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டிகள் பலவற்றை வாஷிங்டனிலுள்ள கடல் கடந்த நாடுகளின் அபிவிருத்தி ஆய்வு நிலையம் (ODC-Overseas Development Council) வெளியிட்டது. அவற்றுட் சில, உலக நாடுகளின் வகை அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ளது.

| நாடுகள் | பௌ.வா.ப.சுட்டி |
|---|---|
| **கைத்தொழில் நாடுகள்** | |
| சுவீடன் | 97 |
| ஜப்பான் | 96 |
| ஐக்கிய அமெரிக்கா | 94 |
| ஐக்கிய ராச்சியம் | 94 |

| எண்ணெய்வள நாடுகள் | |
|---|---|
| குவைத் | 74 |
| லிபியா | 44 |
| ஐக்கிய அரபு எமிரேட் | 33 |
| கட்டார் | 31 |
| **குறைந்த வருமான நாடுகள்** | |
| இலங்கை | 82 |
| இந்தியா | 43 |
| பாகிஸ்தான் | 38 |
| வங்காளதேசம் | 35 |
| நேபாளம் | 26 |
| கெபோன் | 21 |
| எதியோப்பியா | 19 |
| **நடுத்தர வருமான நாடுகள்** | |
| சிங்கப்பூர் | 83 |
| பிலிப்பைன்ஸ் | 71 |
| தாய்லந் | 68 |
| மலேசியா | 62 |
| இந்தோனேசியா | 48 |
| எகிப்து | 42 |
| **சோஷலிச நாடுகள்** | |
| சோவியத் ரஷ்யா | 91 |
| கியூபா | 84 |
| சீனா | 57 |

மூலம்: கடல்கடந்த நாடுகளின் அபிவிருத்திக் கவுன்ஸில் அறிக்கை வாஷிங்டன் (O.D.C, Report)

இவ்வாறான பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டி அளவீட்டில் கூட குறைபாடுகள் உள்ளதாகப் பின்னர் கூறப்பட்டது. இதற்குக்



காரணம் சுட்டிகளைத் தயாரிப்பதற்கான தகவல்களைப் பிழையின்றிச் சேகரிப்பதில் உள்ள உண்மையற்ற தன்மைகளும், காலத்திற்குக் காலம் பல்வேறு நாடுகளின் அளவீட்டுக் குறிகாட்டிகள் மிக வேகமான அதிகரிப்பையும், குறைவையும் ஒப்பீட்டு ரீதியில் காட்டிய சிக்கலான தன்மைகளுமாகுமெனக் கூறப்பட்டது.

அபிவிருத்தியை அளவிடுவதில் மேலும் பொருத்தமான ஒரு சுட்டியாக 1990 ஆம் ஆண்டு முதல் ஐ. நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தித் திட்டமானது (UNDP) மனித அபிவிருத்திச் சுட்டி (Human Development Index - HDI) என்ற ஒன்றை அறிமுகஞ் செய்துள்ளது.

## மனித அபிவிருத்திச் சுட்டி அடிப்படையிலான அளவீட்டு முறை

மனித அபிவிருத்திச் சுட்டியானது ஏறத்தாழ 173 நாடுகளை உள்ளடக்கியதாகக் கணிக்கப்பட்டது. இந்தச் சுட்டியுள் ஆயுள் எதிர்பார்ப்பு, கல்வி அடைவு, கொள்வனவுச்சக்தி, வைத்தியர் தொகை, தொலைக்காட்சிப் பாவிப்புத் தொகை, இராணுவச்செலவு, நகரமயமாக்கம், இயற்கை வளங்கள் போன்ற 52 தகவல் உள்ளடக்கப்பட்டபோதும் ஐ.நா.தாபனத்தின் மனித அபிவிருத்தி ஆண்டறிக்கையுள் பிரதானமாக (1) பிறப்புள் ஆயுள் எதிர்பார்ப்பு,(Life expectancy at Birth) (2) எழுத்தறிவு வீதம், (Literacy rate) (3) இடையாண்டுப் பாடசாலைக்கல்வி, (Mean years of Schooling) (4) கல்வி அடைவு, (Educational attainment) (5) ஆள்வீத மெய் உள்நாட்டு உற்பத்தி (Real GDP Per Capita (PPP$))ஆகிய 5 சுட்டிகள் இணைக்கப்பட்டு மனித அபிவிருத்திச் சுட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட பல நாடுகளுக்கான மனித அபிவிருத்திச் சுட்டிகளை (HDI) 1990 ஆம் ஆண்டு முதல் ஐ.நா.தாபனத்தின் அபிவிருத்தித் திட்டமானது (UNDP) மனித அபிவிருத்தி சுட்டிகள் என்ற அறிக்கையாக வெளியிட்டு வருகின்றது. அவற்றுள் சில உலக நாடுகளின் வகை அடிப்படையில் கீழே காணப்படுகின்றன.

## மனித அபிவிருத்திச் சுட்டி

| நாடுகள் (தரத்தின் அடிப்படையில்) | மனித அபிவிருத்திச் சுட்டி (HDI) 1990 | 1992 |
|---|---|---|
| உயர் மனித அபிவிருத்தி (HDI- 0.800 க்கு மேல்) | (High Human development) | |
| கனடா | 0.982 | 0.932 |
| சுவிச்சர்லந்து | 0.977 | 0.931 |
| ஜப்பான் | 0.981 | 0.929 |
| சுவீடன் | 0.976 | 0.928 |
| நோர்வே | 0.978 | 0.928 |
| பிரான்ஸ் | 0.969 | 0.927 |
| அவுஸ்திரேலியா | 0.971 | 0.926 |
| ஐக்கிய அமெரிக்கா | 0.976 | 0.925 |
| நெதர்லந் | 0.968 | 0.923 |
| ஐக்கிய ராச்சியம் | 0.962 | 0.919 |
| ஜேர்மனி | 0.955 | 0.918 |
| ஆஸ்த்திரியா | 0.950 | 0.917 |
| பெல்ஜியம் | 0.950 | 0.916 |
| ஐஸ்லந்து | 0.958 | 0.914 |
| டென்மார்க் | 0.953 | 0.912 |
| பின்லந்து | 0.953 | 0.911 |
| லக்சம்பேக் | 0.929 | 0.908 |
| நியூஸிலந் | 0.947 | 0.907 |
| இஸ்ரேல் | 0.939 | 0.900 |
| பாபடோஸ் | 0.927 | 0.894 |
| அயர்லந் | 0.921 | 0.892 |
| இத்தாலி | 0.922 | 0.891 |
| ஸ்பைன் | 0.916 | 0.888 |
| ஹொங்கொங் | 0.913 | 0.875 |
| கிரீஸ் | 0.901 | 0.874 |
| சைப்ரஸ் | 0.912 | 0.873 |
| செக்கோஸ்லோவைக்கியா | 0.897 | 0.872 |
| லித்துவேனியா | - | 0.868 |
| எஸ்தோனியா | - | 0.867 |
| லத்வியா | - | 0.865 |
| ஹங்கேரி | 0.893 | 0.863 |
| கொரியக்குடியரசு | 0.871 | 0.859 |
| உருகுவே | 0.880 | 0.859 |
| ருஷ்ய சமஷ்டி | 0.873 | 0.858 |
| டிரினிடாத்தும் டொபாகோவும் | 0.876 | 0.855 |
| பஹாமாஸ் | 0.875 | 0.854 |
| ஆர்ஜன்டீனா | 0.833 | 0.853 |
| சிலி | 0.863 | 0.848 |
| கொஸ்ட்டாரிகா | 0.842 | 0.848 |
| பெலாரஸ் | - | 0.847 |
| மோல்ட்டா | 0.854 | 0.843 |
| போத்துக்கல் | 0.850 | 0.838 |
| சிங்கப்பூர் | 0.848 | 0.836 |
| புருணைதாருஸ்ஸலாம் | 0.848 | 0.829 |
| உக்ரைன் | - | 0.823 |
| வெனிசுவிலா | 0.824 | 0.820 |
| பனாமா | 0.731 | 0.816 |
| பல்கேரியா | 0.865 | 0.815 |
| போலந் | 0.874 | 0.815 |
| கொலம்பியா | 0.758 | 0.813 |
| குவைத் | 0.815 | 0.809 |
| மெக்ஸிகோ | 0.804 | 0.804 |
| ஆர்மீனியா | - | 0.801 |

| மத்திம (நடுத்தர) மனித அபிவிருத்தி (Medium human development) (HDI - 0.500 - 0.799 வரை) | 1990 | 1992 |
|---|---|---|
| தாய்லந் | 0.685 | 0.798 |
| அன்டிகுவாவும் பாபுடாவும் | 0.781 | 0.796 |
| கட்டார் | 0.802 | 0.795 |
| மலேசியா | 0.789 | 0.794 |
| பஹ்ரைன் | 0.790 | 0.791 |
| பிஜி | 0.713 | 0.787 |
| மொரிஷியஸ் | 0.793 | 0.778 |
| கஸாகஸ்த்தான் | – | 0.774 |
| ஐக்கிய அரபு எமிரேட் | 0.740 | 0.771 |
| பிரேஸில் | 0.739 | 0.756 |
| டொமினிக்கா | 0.783 | 0.749 |
| ஜமெய்க்கா | 0.722 | 0.749 |
| ஜோர்ஜியா | – | 0.747 |
| சவூதி அரேபியா | 0.687 | 0.742 |
| துருக்கி | 0.671 | 0.739 |
| சாந்தவின்சன்ட் | 0.693 | 0.732 |
| சாந்தகிட்சும்நெவிசும் | 0.686 | 0.730 |
| அஸர்பைஜான் | – | 0.730 |
| ருமேனியா | 0.733 | 0.729 |
| சிரிய அரபுக் குடியரசு | 0.665 | 0.727 |
| ஈக்வடோர் | 0.641 | 0.718 |
| மோல்ட்டோவா குடியரசு | – | 0.714 |
| அல்பேனியா | 0.791 | 0.714 |
| சாந்தலூசியா | 0.712 | 0.709 |
| கிரானடா | 0.758 | 0.707 |
| லிபிய அரபு ஜமாஹிரியா | 0.659 | 0.703 |
| துருக்மேனிஸ்த்தான் | – | 0.697 |
| டியூனிசியா | 0.582 | 0.690 |



| | | |
|---|---|---|
| கைர்கிஸ்த்தான் | – | 0.689 |
| சீசல்ஸ் | 0.740 | 0.685 |
| பரகுவே | 0.637 | 0.679 |
| சுரினாம் | 0.749 | 0.677 |
| ஈரான் இஸ்லாமியக் குடியரசு | 0.547 | 0.672 |
| பொட்ஸ்வானா | 0.534 | 0.670 |
| பெலைஸ் | 0.665 | 0.666 |
| கியூபா | 0.732 | 0.666 |
| இலங்கை | 0.651 | 0.665 |
| உஸ்பெகிஸ்த்தான் | – | 0.664 |
| ஓமான் | 0.598 | 0.654 |
| தென் ஆபிரிக்கா | 0.674 | 0.650 |
| சீனா | 0.612 | 0.644 |
| பேரு | 0.600 | 0.642 |
| டொமினிக்கன் குடியரசு | 0.595 | 0.638 |
| தாஜிகிஸ்த்தான் | – | 0.629 |
| ஜோர்டான் | 0.586 | 0.628 |
| பிலிப்பைன்ஸ் | 0.600 | 0.621 |
| ஈராக் | 0.589 | 0.614 |
| கொரிய ஜனநாயகக் குடியரசு | 0.654 | 0.609 |
| மொங்கோலியா | 0.574 | 0.607 |
| லெபனான் | 0.561 | 0.600 |
| சாமோ | 0.591 | 0.596 |
| இந்தோனேசியா | 0.491 | 0.586 |
| நிக்கராகுவா | 0.496 | 0.583 |
| கயனா | 0.539 | 0.580 |
| கௌத்தமாலா | 0.485 | 0.564 |
| அல்ஜீரியா | 0.533 | 0.553 |
| எகிப்து | 0.385 | 0.551 |
| மொரோக்கோ | 0.429 | 0.549 |

| | | |
|---|---|---|
| எல்சல்வடோர் | 0.498 | 0.543 |
| பொலிவியா | 0.394 | 0.530 |
| கெபோன் | 0.545 | 0.525 |
| ஹொன்ட்ரஸ் | 0.473 | 0.524 |
| வியட்நாம் | 0.464 | 0.514 |
| சுவாசிலாந் | 0.458 | 0.513 |
| மாலைத்தீவுகள் | 0.490 | 0.511 |

| குறைவான மனித அபிவிருத்தி (Low human development) (HDI - 0.500 க்கு கீழ்) | 1990 | 1992 |
|---|---|---|
| வான்வார்ட்டு | 0.536 | 0.489 |
| லெஸோட்டா | 0.423 | 0.476 |
| ஸிம்பாவே | 0.397 | 0.474 |
| கேப்வேர்ட் | 0.437 | 0.474 |
| கொங்கோ | 0.372 | 0.461 |
| கெமரூன் | 0.313 | 0.447 |
| கென்யா | 0.366 | 0.434 |
| சொலமன் தீவுகள் | 0.434 | 0.434 |
| நமீபியா | 0.295 | 0.425 |
| சாவோடோமும் பிரின்ஸிப்பும் | 0.374 | 0.409 |
| பாபுவா நியூகினியா | 0.321 | 0.408 |
| மியான்மார் | 0.385 | 0.406 |
| மடகஸ்கர் | 0.325 | 0.396 |
| பாகிஸ்த்தான் | 0.305 | 0.393 |
| லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசு | 0.240 | 0.385 |
| கானா | 0.310 | 0.382 |
| இந்தியா | 0.297 | 0.382 |
| கோர்'டி' ஐவொயர் | 0.289 | 0.370 |
| ஹைட்டி | 0.276 | 0.354 |
| ஸாம்பியா | 0.315 | 0.352 |



| | | |
|---|---|---|
| நைஜீரியா | 0.241 | 0.348 |
| ஸயர் | 0.262 | 0.341 |
| கொமோரோஸ் | 0.269 | 0.331 |
| யெமன் | 0.232 | 0.323 |
| செனிகல் | 0.178 | 0.322 |
| லைபீரியா | 0.227 | 0.317 |
| டோகோ | 0.218 | 0.311 |
| வங்காள தேசம் | 0.185 | 0.309 |
| கம்போடியா | 0.178 | 0.307 |
| தான்சானியா ஐக்கிய குடியரசு | 0.268 | 0.306 |
| நேபாளம் | 0.168 | 0.289 |
| ஈக்வடோரியல்கினியா | 0.163 | 0.276 |
| சூடான் | 0.157 | 0.276 |
| புருண்டி | 0.165 | 0.276 |
| ருவாண்டா | 0.186 | 0.274 |
| உகன்டா | 0.192 | 0.272 |
| அங்கோலா | 0.169 | 0.271 |
| பெனின் | 0.111 | 0.261 |
| மாலாவி | 0.166 | 0.260 |
| மொரிடானியா | 0.141 | 0.254 |
| மொஸாம்பிக் | 0.153 | 0.252 |
| மத்திய ஆபிரிக்க குடியரசு | 0.159 | 0.249 |
| இதியோப்பியா | 0.173 | 0.249 |
| பூட்டான் | 0.146 | 0.247 |
| டிபோர்ட்டி | 0.084 | 0.226 |
| கினியா-பிஸோ | 0.088 | 0.224 |
| சோமாலியா | 0.088 | 0.217 |
| கெம்பியா | 0.083 | 0.215 |
| மாலி | 0.081 | 0.214 |
| சாட் | 0.088 | 0.212 |

| | | |
|---|---|---|
| நைஜர் | 0.078 | 0.209 |
| சியாராலியோன் | 0.062 | 0.209 |
| ஆப்கானிஸ்த்தான் | 0.065 | 0.208 |
| பக்கினாபேஸோ | 0.074 | 0.203 |
| கினியா | 0.052 | 0.191 |

மூலம்:- மனித அபிவிருத்திச் சுட்டி அறிக்கை - 1994

## அபிவிருத்தியை அளத்தலின் பிரச்னைகளும் முடிபும்

அபிவிருத்தி அளவீட்டுக் காரணிகளையும், அளவீட்டு முறைகளையும், அவைகளின் பொருத்தப்பாடுகளையும் பல்வேறு வகையில் நாம் பார்த்தாலும் எல்லா அளவீட்டு முறைகளிலும் காணப்படும் பொதுவான பிரச்னைகளையும், எடுக்கக் கூடிய முடிபுகளையும் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்பதும் பயனுடையதாகும்.

அபிவிருத்தி அளவீட்டு முறைகள் யாவற்றிலுமே பொதுவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துக்கள் அமையவில்லை என்பதும், இதனால் அபிவிருத்தியை அளவிடுதல் கஷ்டமானது என்ற முடிவுக்கு வருமுன் அவைகள் எவ்வாறான சிக்கல்களையும் பிரச்னைகளையும் தோற்றுவிக்கின்றன என்பதை அறிதல் வேண்டும்.

உலக நாடுகளின் அடிப்படையில் அபிவிருத்தியை அளவிடும் போது அல்லது அபிவிருத்தியின் அளவு அடிப்படையில் உலக நாடுகளை வகைப்படுத்தும்போது அடிப்படைப் பிரச்னைகள் பல எழுகின்றன.

அபிவிருத்தியை அளவிடுதல் என்பது உலகின் செல்வந்த - வறிய நாடுகளிடையே தெளிவாகத் தெரியும் வேறுபாடுகளை அல்லது சமூக சமமின்மைகளை அளத்தலாகும். இவ்வாறு அளவிடும்போது ஏற்படும் மூலாதாரப் பிரச்னை 'அபிவிருத்தி' என்ற பதத்திற்குப் பொதுவான முடிவு ஏற்படாததாகும். இன்று பொருளியல், சமூகவியல், அரசியல், புவியியல் ஆகிய துறைகளில் அபிவிருத்தி பற்றி வெளியிடப்படும் கருத்துக்களில் ஒருமைப்பாடின்மை காணப்படுவது அபிவிருத்தியை அளவிடுவதில் சிக்கலை ஏற்படுத்துகின்றது.



அபிவிருத்தியை அளவிடுதலில் ஏற்படும் இன்னொரு பிரச்னை அபிவிருத்தியின் தன்மைகள் பல்துறை சார்ந்தும் மிகப் பாரதூரமாக வேறுபடுவதும் அதனால் அபிவிருத்தி என்பது வேறுபடுவதுமாகும். இதனைக் காலத்திற்குக் காலம் அபிவிருத்தி பற்றிய கருத்துக்களை வெளியிட்ட ஆய்வாளர்களின் கூற்றுக்களிலிருந்து தெரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அபிவிருத்தி அளவீடு பற்றி முதலில் ஜோன் ஸ்டுவாட் மில்லும், அதுமுதல் இன்று வரை W.W.றொஸ்ட்டோ, கிண்டல்பேர்கர், அடல்மன், டட்லி சீயர்ஸ் போன்றோரும் பல்வேறு காலங்களிலும் உலக நாடுகளில் காணப்பட்ட அபிவிருத்தித் தன்மைகளுக் கேற்ப விளக்கம் தந்தனர். ஆகவே குறித்த காலப்பரப்பில் அபிவிருத்தியை அளவிடப் பயன்படுத்திய முறைகளும், காரணிகளும் வேறொரு காலப்பகுதியில் அபிவிருத்தி அளவீட்டில் சிக்கல்களையும், நம்பகரமற்ற தன்மைகளையும் ஏற்படுத்தின. இதனால் அளவீட்டு முறைகள் நீண்ட காலத்தில் வலுவற்றனவாகவும், பொருத்தமற்றனவாகவும் காணப்பட்டன.

அபிவிருத்தியை அளவிடும்போது அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்துவரும் தன்மைகள் எனப் பாகுபடுத்தும் எல்லை வரையறை எது என்னும் கேள்வி இன்னொரு பிரச்னையாகும். ஆரம்பத்தில் தலா நபர் வருமான அளவீட்டின் அடிப்படையில் 200 அமெரிக்க டொலர்களெனவும், பின்னர் பேராசிரியர் ஹிகின்ஸின் அளவீட்டு முறையில் அது 500 அமெரிக்க டொலர்களெனவும் வரையறை செய்யப்பட்டது. ஆனால் இன்று பல நாடுகளின் தலா நபர் வருமான வளர்ச்சி வேகத்தை நோக்கும்போது ஏனைய பொருளாதாரத் துறையிலும், சமூக, கலாசாரத் துறையிலும் தேங்கிய நாடுகளும் கூட மேற்கூறிய கருத்தின்படி அபிவிருத்தி பெற்றுவிட்டன எனக் கருதுவது சிக்கலை ஏற்படுத்துகின்றது.

அடுத்துப் பொருளாதார காரணிகளான மொத்தத் தேசிய உற்பத்தி, தலா நபர் வருமானம் ஆகிய அளவீட்டு காரணிகளைப் பொறுத்தவரை அவற்றைப் பிழையின்றி அளவிடுதல் மிகக் கஷ்டமாகும். இந்நிலையில் இக்காரணிகளின் மூலம் உலகின் அபிவிருத்தியை அளவிடுவதென்பது ஒருதலைப் பட்சமானது எனக் கருதப்படுகின்றது. உற்பத்தியின் மொத்தப் பணப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்ட காரணிகளின் மூலம் அபிவிருத்தியை அளவிடுவதென்பது எப்போதும் சரியான பெறுபேற்றைத் தருவதில்லை எனவும்

கூறப்படுகின்றது. மொத்தத் தேசிய உற்பத்திப் பெறுமானத்தை அல்லது தலா நபர் வருமானத்தை சர்வதேசப் பண அலகின் மூலம் அளவிடுவது எப்போதும் பொருத்தமானதாக இல்லை எனப்படுகின்றது. எடுத்துக்காட்டாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தேசிய உற்பத்திப் பெறுமதியில் பணப் பெறுமதிக்கடங்காத வற்றை உட்படுத்துவது மிகக் கஷ்டமாகும். ஆனால் அபிவிருத்தி அடைந்த நாட்டில் எல்லா அம்சங்களும் பணப் பெறுமதியின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன. சில நாடுகளில் சர்வதேச ரீதியாக மாத்திரமன்றிப் பிரதேச ரீதியிலும் கொள்வனவுச் சக்திகள் மாறுபடுகின்றன. ஆகவே சர்வதேச ரீதியாகக் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களின் பெறுமதி உள்ளூர்ப் பணப் பெறுமதிக்கு மாறும் போது உண்மையான பணத்தின் பெறுமதி பிரதிபலிக்கப்படுவதில்லை. மேலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பொருள்களின் பெறுமதியைப் பணத்தின் மூலம் அளவிட்டுக் காட்டுவது கஷ்டமாகும். ஏனெனில் அந்நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளினாற் பெறப்படும் உற்பத்திகளின் அதிகளவு, உற்பத்தியாளர்களாலேயே நுகரப்படுவதாகும். மேலும் உள்ளூரில் நுகரப்படும் பொருள்களின் அளவு மொத்தத் தேசீய உற்பத்திக் கணக்கெடுப்பின்போது சர்வதேச அடிப்படையில் மதிப்பிடப் படுவதில்லை. மேலும் உலகில் வாழும் சகலருக்கும் ஒரே தொகையான தலா நபர் வருமானமே அவர்களது தேவை முழுவதற்கும் பொருத்தமானது என்பதை அடிப்படையாகக் கொண்டு அதனை, அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்துவது சரியானதாக அமையவில்லை. ஏனெனில் குளிர்பிரதேச மக்களின் தேவைகளிலிருந்து வெப்பப் பிரதேச மக்களின் தேவை உச்சப் பயன்பாட்டின் அல்லது அத்தியாவசியப் பயன்பாட்டின் அடிப்படையில் குறைவாக இருக்கலாம். சில வகையில் தேவையற்றதாகவும் இருக்கலாம். இதனால் ஒரே தொகையான தலா நபர் வருமானமென்பது சில நாடுகளில் மிகையைக் காட்டக்கூடும். ஆகவே சில நாடுகள் குறைந்த தலா நபர் வருமானத்தில் கூடிய அபிவிருத்தியையும், மற்றும் சில நாடுகள் கூடிய தலா நபர் வருமானத்தில் குறைந்த அபிவிருத்தியையும் அடைய முடியும். இவ்வாறான நிலையில் அபிவிருத்தி அளவீட்டுக்கு உலக நாடுகள் யாவற்றுக்கும் ஒரே அளவான தலா நபர் வருமானத்தை வரையறை செய்வது பொருத்தமானதாக அமையவில்லை எனக் கூறப்படுகிறது.



அபிவிருத்தியை அளவிடுவதில் சமூகக் காரணிகளைப் பயன்படுத்தும்போது சில நாடுகள் வாழ்க்கையின் மிகவும் முக்கியமான சிலவற்றை அளவீட்டில் சேர்க்காமல் விடுவதும் உண்டு. இவ்வாறான ஒரு நிலையில் கிடைக்கக் கூடியதாகச் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரத் தரவுகளை மாத்திரம் வைத்து ஒப்பிடுதல், வகைப்படுத்தல் ஆதியன இடம் பெறும். இது சர்வதேச அளவீட்டில் உண்மைத் தரவுகளை எடுத்துக்காட்டத் தவறி விடுகின்றன.

அபிவிருத்தி அளவீட்டின்போது ஏற்படும் மற்றொரு பிரச்சனை, அளவிடுவதற்காகப் பயன்படுத்தும் பல்வேறு காரணிகளின் தேவைக் கேற்றவாறு புள்ளித் தரவுகளைச் சேகரிப்பதிலுள்ள சிரமமாகும். இதற்குக் காரணம் புள்ளித்தரவுகளைச் சேகரிப்பதற்கான சர்வதேச ரீதியிலமைந்த ஏற்றுக் கொள்ளத்தக்க நடைமுறைகள் இல்லாததும், பல்வேறு நாடுகளும் தத்தமது அபிலாசைகளுக்கேற்பப் புள்ளிவிபரத் தரவுகளையும், விபரங்களையும் சேகரிப்பதுமாகும். அத்தோடு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பல்வேறு வசதியீனங்கள் காரணமாகச் சேர்க்கப்படும் தரவுகள் காலங்கடந்து சர்வதேச ஆய்வுகளில் இடம் பெறுதலாகும்.

அண்மைக் காலத்தில் முக்கியம் பெற்ற பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டியை அடிப்படையாகக் கொண்ட தரவுகளிலும் பல குறைபாடுகள் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இதற்காக இணைத்துக் கணிக்கப்படும் ஆயுள் எதிர்பார்ப்பு, சிசு மரணவீதம், எழுத்தறிவு என்பவற்றை நோக்கினால் இவற்றின் கணிப்பீடுகள் யூகத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது. இதனைத்தவிர ஆயுள் எதிர்ப்பார்ப்பு, சிசு மரணவீதம் என்பன, இயற்கை அடிப்படையில் நாட்டின் பல்துறை அபிவிருத்திகளுக்கேற்ப (சுகாதாரத்துறை அபிவிருத்தி போன்றவை) சாதகமாக மாறினாலும் வேறு காரணிகளினால் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் பாதகமான திடீர் மாற்றங்களை ஏற்படுத்தும்போது அந்நாடுகளில் ஒரு அபிவிருத்திக் கால எல்லைக்கும் இன்னொரு அபிவிருத்திக் கால எல்லைக்குமிடையில் அபிவிருத்தி வீழ்ச்சியைக் காட்டவும் முடியும். உதாரணமாக மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றில் நீண்ட காலங்களில் நிகழ்ந்துவரும் யுத்தம் குறிப்பிட்ட வயதெல்லையைக் கொண்ட பெருந்தொகையான மக்களை (படைவீரர்களை) குறிப்பிட்ட அபிவிருத்திக் கால எல்லைக்குள்

மரணிக்கச் செய்து விடுகின்றன. இதேபோல் இன்னும் பல நாடுகளில் ஏற்படும் எரிமலைத்தாக்கம், திடீர் புவி அதிர்ச்சி, வெள்ளம், சூறாவளி போன்ற திடீர் இயற்கை அழிவுச்சக்திகள் ஒருகால எல்லைக்குள் ஆயுள் எதிர்பார்ப்பிலும், சிசு மரண வீதத்திலும் பாதகமான நிலையைக் காட்டலாம். எனவே இப்புள்ளி விபரத்தரவுகளை அக்கால எல்லை அபிவிருத்தையை அளப்பதற்குப் பயன்படுத்தும் போது உண்மைத்தன்மை அற்றுப் போகின்றது எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறான பல்வேறு குறைபாடுகளின் காரணமாக அபிவிருத்தியின் சரியான அளவீடென்பது எந்தக் காரணிகளாலும் பூரணத்துவமுடையதாக மேற்கொள்ளக்கூடியதாக இன்றில்லை என்பது புலனாகின்றது. எனினும் உலக நாடுகள் பல்வேறு துறைகளிலும் தத்தமது நிலைமையைச் சரிபார்த்து முன்னேறுவதற்கு, அபிவிருத்தியின் இந்த மேலோட்டமான அளவீடுகளேனும் அவசியமென ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.



# 4

# அபிவிருத்திப் பரம்பலும், இடைவெளியும்

## அபிவிருத்திப் பரம்பல் அமைப்பின் தன்மை

உலக நாடுகளின் இன்றைய அபிவிருத்தியில் வேறுபட்ட தன்மைகள் காணப்படுவதனை அறிவதுடன், அவற்றின் அபிவிருத்தி நிலைகளின் பல்வகை இயல்புகளையும் அறிவதற்குப் பல வகையான காரணிகள் துணையாக உள்ளன என்பதையும் அறிதல் இன்றியமையாததாகும். அபிவிருத்தி மட்டங்களின் (நிலைகளின்) அடிப்படையில் இன்று உலக நாடுகள் ஏதாவது ஒரு அமைப்பைச் சார்ந்து பரம்பி இருப்பதனைக் காணமுடியுமாகும். அபிவிருத்திப் புவியியல் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டோர் இவ்வாறான அபிவிருத்திப் பரம்பல் அமைப்பு முறை இருக்கின்றதா என்பதையும், அவ்வாறாயின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும் ஆராய முயன்றதன் காரணமாக புவியியற் பின்னணி, இயற்கை வளத்தின் அளவு, பொருளாதாரச் சக்தி, மனித வளம் என்பன அபிவிருத்திப் பரம்பலின் தன்மையை அறிவதற்குத் துணையாகின்றன என எடுத்துக் காட்டினர். இந்தக் காரணிகள் ஒன்றோ பலவோ உலக நாடுகள் யாவற்றிலும் ஒத்த தன்மையில் காணப்படாததன் காரணமாக நாடுகளின் அபிவிருத்தி மட்டங்களிலும் வேறுபாடுகள் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆகவே அபிவிருத்தியில் சமமற்ற பரம்பல் காணப்படுவதாக எடுத்துக் காட்டப்பட்டது.

இவ்வாறான சமமற்ற பரம்பலை அபிவிருத்தி அடைந்த நாடுகளையும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளையும் வைத்து ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறிய முடியுமெனப் பலராலும் எடுத்துக் காட்டப்பட்டது. ஆனால் பின்னைய ஆய்வுகளின் மூலம் அபிவிருத்தி அடைந்த நாடுகளையும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளையும் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் இக்காரணிகளின் செல்வாக்கு ஒத்த தன்மையுடையதெனக் கருத இயலாதெனக் கூறப்பட்டது. இன்று சமமற்ற அபிவிருத்திப் பரம்பல் உலகில் வலயத்திற்கு வலயமும், நாடுகளுக்குள் பிரதேசத்திற்குப் பிரதேசமும், பிரதேசத்துள் இடத்திற்கிடமும் காணப்படுவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மேற்கூறிய வேறுபாடுகளின் மத்தியிலும் ஓரளவுக்காயினும் உலகின் அபிவிருத்தி மட்டங்களில் ஒருமைப்பாட்டைக் காண்பதற்காகப் பல ஆய்வாளர்களும் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டனர். இவற்றின் பின்னணியில் அபிவிருத்திப் பரம்பல் அமைப்புக்களை அறிவதற்காக வகுத்து காட்டப்பட்ட பாகுபாடுகளிற் சில பின்வருமாறு:

* மொத்தத் தேசிய உற்பத்தி, ஆய்வீத வருமானம் ஆகிய பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விரிவான முறையில் இரு வலயங்களாக வகுத்துக் காட்டிய அபிவிருத்திப் பரம்பல் அமைப்பு இவை:

  அபிவிருத்தி அடைந்த நாடுகளும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும்

  அல்லது

  வடக்கு நாடுகளும் தெற்கு நாடுகளும்

* பொருளாதாரக் காரணிகளையும், நிர்வாக அமைப்பு முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு எடுத்துக்காட்டிய நான்கு வலயங்களைக் கொண்ட அபிவிருத்திப் பரம்பல் அமைப்பு, இவை:

  - அதிகரித்த அபிவிருத்தியைக் கொண்ட கைத்தொழில், வர்த்தகப் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள்.

    அரை அபிவிருத்தியுடைய கைத்தொழிலும், விவசாயமும் கலந்த பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள்.

    குறை அபிவிருத்தியுடைய அடிப்படை விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகள்.



* ஜின்ஸ் பேர்க்கினால் எடுத்துக் காட்டப்பட்ட மூன்று வலயங்களைக் கொண்ட அபிவிருத்திப் பரம்பல் அமைப்பு, இவை:

  அதிக அபிவிருத்தியுடைய நாடுகள்

  மத்திமமான அபிவிருத்தியையுடைய நாடுகள்

  கீழ்நிலை அபிவிருத்தி கொண்ட நாடுகள்

* "நியூயோர்க் டைம்ஸ்" சஞ்சிகை மேற்கொண்ட பொருளாதார ஆய்வுகளின் கீழ் எடுத்துக் காட்டப்பட்ட ஐந்து வலயங்களைக் கொண்ட அபிவிருத்திப் பரம்பல் அமைப்பு, இவை:

  செல்வந்த நாடுகள்

  சோஷலிச நாடுகள்

  எண்ணெய் வள நாடுகள்

  நான்காம் உலக நாடுகள்

  வறிய நாடுகள்

மேற் கூறப்பட்ட எல்லா அபிவிருத்திப், பரம்பல் அமைப்புப் பாகுபாடுகளிலும் செல்வாக்குச் செலுத்திய முக்கிய காரணிகளாக சனத்தொகை, இயற்கை வளம், தொழினுட்பம், மூலதனம் ஆதியன விளங்கின. ஆனால் இன்று உலக நாடுகளின் அபிவிருத்திப் பரம்பல் அமைப்புக்கள் வேறும் பல்வேறு இயல்புகளுடனும், காரணிகளுடனும் தொடர்புடையயவாக விளங்குவதனை அபிவிருத்தி என்பதன் வரைவிலக்கணம், அபிவிருத்திப் பின்னணியில் உலக நாடுகள், அபிவிருத்தி அளவீடு ஆகிய பாடங்களில் கற்றவற்றின் மூலம் அறிந்து கொள்ள முடியுமாகும்.

# அபிவிருத்திப் பரம்பல் அமைப்பில் அபிவிருத்தி அடைந்த நாடுகளும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும்

## சனத்தொகை அடிப்படையில்:

அபிவிருத்தி அடைந்த நாடுகளென்றும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளென்றும் அபிவிருத்திப் பரம்பலின் அடிப்படையில் நாடுகள் வகுக்கப்பட்டன. இவ்விரு தொகுதிகளுக்குமிடையே

அபிவிருத்திப் பரம்பல் அமைப்பில் பெரிய இடைவெளி காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான இடைவெளியை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் சனத்தொகையும் ஒன்று எனக் கூறப்பட்டது. அபிவிருத்தி அடைந்து வரும் அதிகமான நாடுகளில் சனத்தொகையின் விரைவான அதிகரிப்பு அபிவிருத்திப் பரம்பல் அமைப்புக்களிலும் வேறுபாட்டைக் காட்டுவதற்கு ஏதுவாகின்றது எனக் கருதப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அதிகரித்த சனத்தொகையின் காரணமாக கல்வி அபிவிருத்தி மட்டங்கள், சுகாதார அபிவிருத்தி மட்டங்கள் ஆதியன மிகத் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் குறைந்த சனத்தொகை உயர்ந்த அபிவிருத்திப் பரம்பலுக்குக் காரணமாக அமைவதாகக் கூறப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்கா, நியூஸிலந், அவுஸ்திரேலியா முதலிய நாடுகள் இதற்குக் எடுத்துக்காட்டுக்களாக விளங்குகின்றன எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறாகக் கூறப்பட்டாலும் அபிவிருத்திப் பரம்பலை விளக்குவதில் சனத்தொகை அதிகரிப்பு சில அடிப்படையில் பொருத்தமற்றதாகக் காணப்படுவதாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக சனத்தொகை கூடிய ஐக்கிய ராச்சியம், ஜப்பான் இன்னும் பல ஐரோப்பிய நாடுகள் ஆதியன கூடிய சனத்தொகையிலும் அபிவிருத்தி அடைந்த பரம்பல் அமைப்பைக் கொண்டனவாக விளங்குவது எடுத்துக் காட்டப்பட்டது. ஆகவே சனத்தொகைக் காரணியில் எடுத்துக் காட்டப்படும் அபிவிருத்திப் பரம்பல் அமைப்புத்தன்மை எப்போதும் சரியானதாக அமையவில்லை.

## இயற்கை வள அடிப்படையில்:

இயற்கை வளங்கள் குறைவாக இருப்பதன் காரணமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்திப் பரம்பல் இடைவெளி, அபிவிருத்தி அடைந்த நாடுகளின் அபிவிருத்திப் பரம்பல் இடைவெளியைவிட மிகவும் அதிகமானதெனக் கூறப்படுகின்றது. ஆகவேதான் அபிவிருத்தி அடைந்து வரும் பரம்பல் என்பதும், அபிவிருத்தி அடைந்த பரம்பலென்பதும் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி மட்டங்களின் கீழ் எடுத்துக் காட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.



இயற்கை வளங்களில் சார்புத் தன்மை கொண்ட அபிவிருத்திப் பரம்பல் அமைப்பை அபிவிருத்தி அடைந்த நாடுகளென்றும், இயற்கை வளங்களில் சார்புத்தன்மை இல்லாத அபிவிருத்திப் பரம்பல் அமைப்பை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளென்றும் இதன் மூலம் பாகுபடுத்திக் காட்டப்பட்டது.

ஆனால் இன்று வரை உலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளெனக் கருதப்படும் அதிகமான நாடுகளில் மிக அதிகமாக இயற்கை வளங்கள் இருப்பது அறியப்பட்டுள்ளது. உதாரணமாக உலகின் நீர்மின்வலு, கனிய எண்ணெய் ஆகிய இயற்கை வளங்களில் 40% மான அளவு ஆபிரிக்கக் கண்டத்திற் காணப்பட்டாலும் ஆபிரிக்கக் கண்டத்தின் 90% க்கும் மேற்பட்ட நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளாக இல்லை. உலக எண்ணெய் வளத்தில் ஏறத்தாழ 35% ஐக் கொண்ட சவூதி அரேபியா, குவைத் என்பன இன்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளாகவே உள்ளன. இந்தியாவையும், ஜப்பானையும் ஒப்பிட்டு நோக்கும்போது ஜப்பானிலும் பன்மடங்கு அதிகமான மூலவளத்தைக் கொண்ட இந்தியா அபிவிருத்தி அடைந்துவரும் நாடாகக் காணப்பட, மூலவளத்தில் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள ஜப்பான் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குள்ளேயே முன்னணியில் நிற்கின்றது. ஆகவே இயற்கை வளங்களின் குறைபாடுதான் குறை அபிவிருத்திப் பரம்பல் அமைப்பிற்குக் காரணமென்பதும் பொருத்தமற்றதெனப்படுகிறது.

## தொழினுட்ப அடிப்படையில்:

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் கைத்தொழில் விருத்திக்கு அவசியமான நவீன தொழினுட்பப் பயிற்சிகள் அதிகமானோருக்குக் கிடைப்பதில்லை என்பதனால் அந்நாடுகள் குறைந்த அபிவிருத்திப் பரம்பல் அமைப்புடையன எனப்பட்டது.

இவ்வாறு கருதப்பட்டாலும் இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளெனக் கருதப்படும் பல நாடுகளினதும் கிராமப்புற மட்டங்களில் தொழினுட்பப் பயிற்சி அற்ற தன்மை காணப்படுகின்றது. அதேபோன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் நகர்ப்புறங்களில் தொழினுட்ப முன்னேற்றங்கள் சிறந்து காண்ப்படுகின்றன.

## மூலதன அடிப்படையில்:

அபிவிருத்தி அடைந்த நாடுகளைவிட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மூலதன ஆக்கம் குறைவாக இருப்பது அந்நாடுகளின் குறைந்த அபிவிருத்திக்குக் காரணமாகுமெனப்படுகின்றது. இதனடிப்படையில் இந்நாடுகள் குறைந்த அபிவிருத்திப் பரம்பல் அமைப்புப் பாகுபாட்டில் அடங்குகின்றன எனப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போலன்றி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தனி மனிதனின் சேமிப்பானது அபிவிருத்தியின் உயர்வுக்குப் போதியதாக அமையவில்லை எனக் கூறப்படுகின்றது.

ஆனால் இன்று இதனையும் ஏற்கமுடியாதிருப்பதாகக் கருதப்படுகின்றது. இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் வரிசையில் வகுக்கப்படும் எண்ணெய் வள நாடுகள் மிக அதிகரித்த மூலதன சக்தியைக் கொண்டு விளங்குகின்றன.

இவ்வாறு பல காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகளின் அபிவிருத்திப் பரம்பல் அமைப்புக்களை எடுத்துக்காட்ட மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை நிலையான பாகுபாடாக நாம் இன்று கொள்ள முடியாதிருக்கின்றது. ஆகவே இவற்றை நாம் அபிவிருத்திப் பரம்பலின் அமைப்புகளை ஏதாயினும் ஒரு வகையில் எடுத்துக்காட்ட முயலும் ஒருவகையான வரிசைக்கிரமம் என மாத்திரமே கொள்ளலாம். அபிவிருத்திப் பரம்பல் அமைப்புக்களை காட்ட முயலும் பல்வேறு நிர்ணயக் காரணிகளினதும் பொருத்தப்பாடு களை மென்மேலும் அலசி ஆராயும் போது அபிவிருத்திப் பரம்பலின் அமைப்பென்பதனை நிரந்தரமாக வரையறை செய்ய முடியாதென்பது புலனாகும். அபிவிருத்தியானது காலத்திற்கேற்பவும், பிரதேசத்திற்கேற் பவும் மாறிச் செல்வது நிர்ணயக் காரணிகளின் தன்மைகளிலும், நிலைமைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

அபிவிருத்தி அளவு ரீதியானதும், பண்பு ரீதியானதுமான தொழிற்பாட்டைக் கொண்டிருப்பதோடு, அதன் இயல்புகளும் காலத்திற்குக் காலம் மாறுவதனால் அபிவிருத்தி மட்டங்களும் மாற்றம் பெறலாம். இந்த மாற்றங்களுக்கேற்ப அபிவிருத்திப் பரம்பலின் அமைப்பென்பதும் நிரந்தரமான வரையறுக்கப்பட்ட பாகுபாட்டிலிருந்தும் வேறுபட்டு ஒருவகை வரிசைக் கிரமமாக மாத்திரம் அமைவதனைக் காணலாம்.



ஏதாவது ஒரு காரணியின் அடிப்படையில் அபிவிருத்திப் பரம்பலின் அமைப்புக்களை நாம் அறிந்து கொள்ள முடியுமாக இருப்பினும், அந்த அமைப்பிற்குள் அடங்கும் நாடுகளுக்கிடையிலும் மிகப் பெரும் வேறுபாடுகளைக் காணக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்ற பரம்பல் அமைப்புப் பாகுபாட்டின் கீழ் சூடான், இலங்கை, எதியோப்பியா ஆதியன எடுத்துக் காட்டப்பட்டாலும் கல்வி அபிவிருத்தியின் கீழ் எழுத்தறிவு என்ற காரணி மிகப் பெரிய வித்தியாசத்தைக் காட்டுகின்றது. இலங்கையின் எழுத்தறிவு வீதம் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தன்மையை ஒத்ததாக 85% மாகக் காணப்பட சூடான், இதியோப்பியா ஆகிய நாடுகளின் எழுத்தறிவு வீதம் மிகக் குறைந்தளவில் மிகப் பெரிய வித்தியாசத்தைக் கொண்டதாக முறையே 20%, 15% என்ற அடிப்படையில் காணப்படுகின்றது.

இதேபோன்று ஒரு அமைப்பின் கீழ் வகுத்துக் காட்டப்படும் நாடொன்றில் பிரதேச ரீதியாகவும், இட ரீதியாகவும், நகர, கிராமப்புற ரீதியாகவும் வேறுபாடுகளைக் காணமுடியுமாகும். உதாரணமாக இலங்கையின் ஈரவலயம் உலர் வலயத்தைவிட அபிவிருத்தியிற் கூடியிருப்பதனை எடுத்துக் காட்டலாம். சாதாரண கிராமப்புறத்தை விடக் கொழும்பு நகரம் அபிவிருத்தியில் உயர்நிலை கொண்டு விளங்குகின்றது. அபிவிருத்தி அடைந்த ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம் போன்ற நாடுகளில் அபிவிருத்தியிற் பின்தங்கிய கிராமப் பகுதிகளும் காணப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் அபிவிருத்தியிற் சிறப்பு நிலை எய்தியுள்ள வடகீழ் ஐக்கிய அமெரிக்க மாகாணங்களை விட றொக்கி மலைசார் பகுதிகள் மிக விருத்தி குறைந்தனவாகக் காணப்படுகின்றன.

மேற் கூறியவற்றை நோக்கும்போது அபிவிருத்திப் பரம்பலின் அமைப்பானது காலத்தாலும், பிரதேசத்தாலும் வேறுவகையிலும் மாற்றமடையக் கூடிய தன்மை வாய்ந்தது என்பது புலனாகும். இதனால் அபிவிருத்திப் பரம்பலின் அமைப்பு வரையறையென்பது நிரந்தரப் பாகுபாடன்றி பொது அடிப்படையில் அமைந்த வரிசைப் படுத்தல் எனப்படுகின்றது. இப்பரம்பல் பல்வேறு நிர்ணயக் காரணிகளினால் வேறுபடுவதனை அபிவிருத்தியின் வரைவிலக்கணம், அபிவிருத்திப் பின்னணியில் உலக நாடுகள், அபிவிருத்தி அளவீடு முதலிய பாடப் பகுதிகளில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு அறிய முடியுமாகும்.

# 5

# அபிவிருத்தியின் பெறுபேறுகள்

அபிவிருத்தியின் பெறுபேறுகளைப் பொருளாதார, சமூக, கலாசாரத் துறைகளில் அபிவிருத்தியடைந்த நாடுகளிலும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் பல அமைப்புக்களில் பொதுத்தன்மை யுடையதாகவும், சிறப்புத்தன்மையுடையதாகவும் அவதானிக்கலாம் எனக் கருதப்படுகிறது. வரலாற்றுக் காலங்களின் ஆரம்ப முதலே நாடுகளிடையே ஏதோ ஒருவகையில் அபிவிருத்தியின் விளைவுகள் ஏற்பட்டு வந்ததனை நாம் உணரக் கூடியதாகவுள்ளது. இன்றைய கால கட்டத்தில் அபிவிருத்தி அடைந்த நாடுகளெனக் கருதப்படும் ஐக்கிய ராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், சோவியத் ரஷ்யா போன்ற நாடுகள் பலதுறை அபிவிருத்திகளின் பெறுபேறுகள் காரணமாகவே அபிவிருத்தி அடைந்த தன்மையைக் பெற்றன எனக் கருதப்படுகிறது. இன்று இவ்வாறான ஒரு நிலைமையைத் தாமும் அடைவதற்காகவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பல முயன்று வருகின்றன எனக் கருதப்படுகின்றது.

உலக நாடுகள் அபிவிருத்தியின் பலாபலன்களை அடைந்ததற்கு பொருளாதார, சமூக, கலாசாரத் துறைகளில் ஏற்பட்ட அறிவு, அறிவியல், தொழினுட்பம், தொழிற்றுறை போன்றவற்றின் வளர்ச்சியே காரணமெனக் கூறப்படுகின்றது. இந்த நடவடிக்கைகள் யாவும் அபிவிருத்தி கருதியே மேற்கொள்ளப்பட்டதனால் இவற்றின் பலாபலன்களை அபிவிருத்தியின் பலாபலன்கள் எனக் கொள்கின்றனர். எனினும் இன்று அபிவிருத்தியின் விளைவுகளில் தொழிற்றுறை, தொழினுட்பத்துறை ஆகியவற்றின் பெறுபேறுகளே விதந்து



பேசப்படுகின்றன. இவற்றின் பெறுபேறுகள் நல்விளைவுகளையும், தீய விளைவுகளையும் ஏற்படுத்துவதாகப் பல்துறைகள் சார்பாக விவாதிக்கப்படுகின்றது.

அபிவிருத்தியின் நற்பேறுகளாக நாட்டின் மூலவளங்களின் பயன்பாடும், வேலை வாய்ப்புக்களின் விரிவாக்கமும், மனிதத் தேவைப் பொருட்கள் இலகுவாகவும், போதியளவிலும் கிடைப்பதும், போக்குவரத்து வசதிகளின் முன்னேற்றமும், இதுபோன்ற பலவும் எடுத்துக் காட்டப்படுகின்றன. இதனைத் தவிர மேற்கூறிய வசதிகளை விவசாயம், கைத்தொழில், வாழ்க்கைத்துறை சார்பான யாவற்றுள்ளும் காணமுடியும்.

அபிவிருத்தியில் உயர் நிலை கண்ட நாடுகள் எனக்கூறப்படும் ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், சோவியத் ரஷ்யா போன்ற நாடுகள் அபிவிருத்தியின் சிறந்த பெறுபேறுகளைப் பல காலங்களுக்கு முன்பே அடைந்துவிட்டன எனக் கூறப்படுகின்றது. குறிப்பாக விவசாய, கைத்தொழில், வாழ்க்கைத்துறைப் பெறுபேறுகளை அந் நாடுகள் அடைந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

விவசாயத் துறைக்கான மூலவளமான நீர், மண் போன்றவை நவீன முறையில் பயன்படுத்தப்படுவது விவசாயத்துறை அபிவிருத்தி முயற்சிகளின் பெறுபேறுகளில் சிலவாகும். மண் பாதுகாப்பு, நீர் முகாமை, நீர்க்கட்டுப்பாடு ஆதியன மூலவளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி உற்பத்தியைக் கூட்டுவதற்கு வழி செய்துள்ளன. நவீன உரப்பசளைப் பாவிப்பு, இயந்திர உபயோகம், புதிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழமையும் புதிய நிலங்கள் ஆதியன புதிய துறைகளில் புதிய வேலைவாய்ப்புகளையும், போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. இவற்றின் காரணமாகப் பெருகும் உற்பத்திப் பின்னணியில் தட்டுப்பாடற்ற பொருட் கொள்ளனவுக்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இந் நிகழ்வுகள் யாவும் அபிவிருத்தியின் கீழ் ஏற்பட்ட பிரதிபலன்களே.

கைத்தொழிற்றுறையில் புதிய மூலவளங்களின் பயன்பாடு அபிவிருத்தி முயற்சியின் காரணமாக விரிவடைந்து, தொடக்கத்தில் ஒரு சில துறைகளில் மாத்திரம் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள் இன்று பல்துறைசார் கைத்தொழில்களுக்கும் பல வகைகளில்

பயன்படுத்தப்படுகின்றன. இயற்கை வாயுப் பாவிப்பு, அணுச்சக்திப் பாவிப்பு, இலத்திரன் செயற்பாடு ஆதியன கைத்தொழிற்றுறையின் அபிவிருத்திப் பின்னணியில் புதிய மூலவளங்களால் ஏற்பட்ட பெறுபேறுகளெனக் கருதப்படுகின்றது. இதனால் புதிய வேலைவாய்ப் புத் துறைகள், மலிவானதும் துரித இயக்கங் கொண்டதுமான சாதனங்கள் கிடைத்தல், போக்குவரத்துத் துறைகளிலும், போக்குவரத்துச் சாதனங்களிலும் முன்னேற்றம் போன்றவை ஏற்பட்டன.

மேற்கூறியவற்றின் மொத்தப் பெறுபேறாக சமூக, கலாசாரத் துறையின் வளர்ச்சியைக் குறிப்பிடலாம் எனக் கூறப்படுகின்றது. மேற்காட்டிய பல்துறை வளர்ச்சிகள் மக்களின் வாழ்க்கைத் துறையோடு இணைந்ததால் அபிவிருத்தியானது மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு, கூடிய தலா நபர் வருமானம், அதிகரித்த நுகர்வு, சிறந்த சுகாதார வசதி, சிறந்த உறையுள் வசதி, ஓய்வு ஆகியவற்றை அடைவதற்கு வாய்ப்பை உண்டாக்கியது எனக் கூறப்படுகின்றது. இவற்றோடு கூடியதாக மலிவாகவும், இலகுவாகவும் பொருட்களைப் பெற முடிந்ததும், சிறந்த போக்குவரத்துத் துறை விருத்தி பெற்றதும், வேலை வாய்ப்புக்கள் பெருகியமையும் விருத்திக்கு அடிகோலியது எனக் கருதப்படுகின்றது. சுருங்கக் கூறின் அபிவிருத்தியின் எல்லாவித நல்விளைவுகளும் தொழினுட்ப, தொழிற்றுறைகளை அடியொற்றிய வளர்ச்சிகளின் பிரதிபலன்கள் எனக் கூறப்படுகின்றது.

இதுவரை நாம் நோக்கியவற்றிலிருந்து அபிவிருத்தியினால் சார்பான விளைவுகள் ஏற்படுகின்றன என்பது எடுத்துக் காட்டப்பட்டது. ஆனால் அபிவிருத்தியின் சமமின்மைகள், அபிவிருத்தியின் சில துறைகள் சார்ந்த அபரிமிதமான வளர்ச்சி என்பன பெருந் தீமைகளையும் விளைவிப்பதாகப் பல ஆய்வாளர்களின் ஆய்வுகளும், ஐக்கியநாடுகள் தாபனத்தின் ஆய்வறிக்கைகளும் எடுத்துக்காட்டியுள்ளன. அபிவிருத்தியின் பின்னணியில் ஏற்பட்ட தொழிற்றுறை வளர்ச்சிகளும், தொழினுட்ப, வாழ்க்கைத்துறை வளர்ச்சிகளும், சூழல் மாசடைதலையும், மூலவள அழிவையும், மூலவள வீண்விரயத்தையும், விரும்பத்தகாத சமூக உருவாக்கத்தையும், சமூக அடைப்படைகள் தகர்தலையும் ஏற்படுத்தி வருவதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகள் எல்லா அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும், அபிவிருத்திக்காக முயற்சிக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நிகழ்காலப் போக்கிலும் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.



சூழல் நிகழ்வுகளைப் பொறுத்தவரை இயல்பான சூழல், மனித செயற்பாட்டினால் உருவான சூழல் ஆகிய இரண்டுமே அபிவிருத்தியின் போது பாதிப்பிற்குள்ளாவதாகக் கூறப்படுகின்றது. அபிவிருத்தியின் தொழினுட்பத்திறனும், விஞ்ஞான அறிவும் இதற்கு மூல காரணமெனக் கூறப்படுகின்றது. உதாரணமாக அதிகரித்து வரும் சனத்தொகைக்காக அதிக உணவை உற்பத்தி செய்து கொள்ளும் வகையில் விவசாயத்தில் நவீன களைகொல்லிகள், கிருமிநாசினிகள் முதலியன உபயோகிக்கப்படும்போது நச்சுத்தன்மைகள் சூழலை மாசுபடுத்தி மனித வாழ்க்கைக்குக் கேடுகளை விளைவிக் கின்றன. இதேபோன்று விவசாய நிலப் பெருக்கத்திற்காகவும், நவீன நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும் இயற்கைத் தாவரப் பிரதேசங்கள் (காடுகள்) வரையறையின்றி அழிக்கப்படும்போது காலநிலைத் தன்மைகளிலும், மனிதனின் சீவியத்திற்கான காட்டு மரத் தேவைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுப் பாதகமான சூழல் விளைவுகள் உண்டாவதாகக் கூறப்படுகின்றது.

கைத்தொழில் அபிவிருத்தி பற்றி நோக்கும்போது, கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக மூலப்பொருள்களைப் பயன்படுத் துதல் இன்றியமையாததாகும். மூலப்பொருள்களும், எரிபொருள்களும் அபிவிருத்தி வளர்ச்சிக்கேற்பத் தொடர்ந்து பயன்படுத்தபபடும் போது அவற்றின் தொகை காலகெதியில் குறைவடைய நேரிடுகின்றது. இறுதியில் அவை முடிவடையும் நிலையும் ஏற்படுகின்றது. இதனைத் தவிர இன்று அபிவிருத்தி என்ற அடிப்படையில் நாடுகள் இலாப நோக்கம் கருதி அபரிமிதமான உற்பத்தியை மேற்கொள்வதற்காகத் தேவைக்கும் அதிகமான மூலவளங்களைப் பயன்படுத்துகின்றன. அபிவிருத்தி அடைந்த பெரிய நாடுகள் எதிர்கால நன்மைகளையும், இலாபங்களையும் இலக்காகக் கொண்டு உற்பத்திகளின் சேமிப்பிற்காக மிக அதிகளவில் மூலவளங்களைப் பயன்படுத்தி வருகின்றன. இவ்வாறான நிலைமைகள் மூலவள அழிவையும், வீண்விரயத்தையும் ஏற்படுத்துவதனால் அபாயகரமான ஒரு நிலைமை உருவாகி வருவதாகக் கூறப்படுகின்றது. கைத்தொழில் அதிகரிப்புகளும், மேலதிக மூலப்பொருள் அகழ்வுகளும், கைத்தொழில் – மூலப்பொருள் களின் இடநகர்வுக்கான போக்குவரத்துச் சாதனங்களின் அதிகரிப்புக்க ளும் அவற்றுடன் கூடிய கழிவுப் பொருள்களை அளவுக்கதிகமாகச் சூழலில் நிறைத்து விடுவதனால் சூழல் மாசுபடுகின்றது. இந்தப் பாதகமான சூழல் விளைவுகள் மனிதனுட்பட உயிரினங்களின்

சீவியத்திற்குப் பாதகமாகவும், அழிவுக்குக் காரணமாகவும் அமைகின்றன. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவின் தொனோறா கைத்தொழிற் பிரதேசத்தின் கைத்தொழிற்சாலையிலிருந்து தொடர்ந்து வெளியேறி வந்த தூசுகள் (கழிவுகள்) 1948 ஆம் ஆண்டில் அங்கு வாழ்ந்த அதிகமான மக்கள் நோய்வாய்ப்படுவதற்குக் காரணமானதுடன் சிலரின் மரணத்திற்கும் காரணமாயமைந்ததெனச் சுகாதார அறிக்கைகள் எடுத்துக் காட்டின.

இனி, அபிவிருத்தியின்போது நகராக்கம், குடியேற்றத் திட்ட உருவாக்கம் ஆகியன புதிய அபிவிருத்திப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்படும்போது அச்சூழலில் வித்தியாசமான புதிய சமூகக் கலப்புக்கள் ஏற்படுகின்றன. இது சமூக, கலாசாரப் பிரச்சினைகளையும், வாழ்க்கைப் பிரச்சினைகளையும் தோற்றுவித்து அபிவிருத்தியின் நீண்ட வளர்ச்சிகளைத் தடை செய்வதுமுண்டு எனக் கூறப்படுகின்றது. இதனால் புதிய இளந் தலைமுறையினரிடையே மதுபானப் பழக்கம், விபச்சாரம், ஒழுக்கக் கேடான நடையுடை பாவனைகள், வன்செயல்கள் தோற்றம் பெறுவதனால் விரும்பத்தகாத சமூக உருவாக்கமொன்று ஏற்படுவதுடன், சமூக அடிப்படைகளும் தகர்ந்து விடுவதாகக் கூறப்படுகின்றது.

இன்று வைத்திய, மருத்துவத் துறைகளில் அபிவிருத்தியின் பெறுபேறுகள் முன்னேற்றத்தைக் காட்டி நின்றாலும், அந்த முன்னேற்றங்களிற் சில இன்று ஒரு வகையில் சமூகத்தின் சீரழிவுக்கும், அடிப்படைத் தகர்வுக்கும் காரணமாக உள்ளதாக எடுத்துக் காட்டப்படுகின்றது. உதாரணமாக மனித நன்மைக்காக உற்பத்தி செய்யப்பட்ட மயக்க மருந்துகள், வீரியத்தையும் உற்சாகத்தையும் தரும் நவீன மருந்து வகைகள் என்பன சமூகத்தில் இளைய சந்ததியினரின் துர்நடத்தைகளுக்கும், வன்செயல்களுக்கும் தூண்டுகோலாக அமைந்துள்ளன. இதற்குக் காரணம் இவற்றின் கட்டுப்பாடற்ற விற்பனையாகும்.

இவ்வாறு அபிவிருத்தியின் நல்லதும், தீயதுமான விளைவுகளை உடனடியாக அன்றேல் காலந்தாழ்த்திக் காணமுடியும் என்பது உண்மை எனப்பட்ட அதே நேரம், இன்று வேறு வகையான விளைவுகளும் அபிவிருத்தியின்போது ஏற்படுவது ஆய்வாளர்களிடையே சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டுள்ளன. குறிப்பாக அபிவிருத்தியின்



தரத்தின் அடிப்படையில் எல்லா உலக நாடுகளினதும் அபிவிருத்திப் பெறுபேறுகள் சமமானவைகளாக இல்லை என்ற சந்தேகம் இன்று எழுப்பப்பட்டுள்ளது.

"தற்போதைய அபிவிருத்தியின் பெறுபேறுகளைத் தரும் தொழினுட்பம் முதலியன செல்வந்த நாடுகளில் ஏனைய செல்வந்த நாடுகளினது அபிவிருத்திக்காகச் செய்யப்பட்டதாகும். இத்தொழினுட்பமே அவர்களைச் செல்வந்தர்களாக்கியது; மேலும் செல்வத்தை வழங்குகின்றது. உலக தொழினுட்பங்களின் ஆற்றல் செல்வந்த, வறிய நாடுகளிடையே எவ்விதம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்பதை அளவிட முடியாது" என பேராசிரியர் ஹான்ஸ் சிங்கர் கூறுகின்றார்.

செல்வந்த நாடுகளின் அபிவிருத்திக்கான தொழினுட்பம் வறிய நாடுகளுக்குப் பொருத்தமற்றதாக இருக்குமெனக் கருதப்படுகின்றது. பல்வேறு மூலவளங்களை ஒன்று திரட்டி அவசியமற்ற - அன்றேல் பொருத்தமற்ற உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்வதிலும், ஒரு சிலருக்கு மாத்திரம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதிலுமே வறிய நாடுகளில் அபிவிருத்திக்கான தொழினுட்பம் பயன் தருகின்றது எனக் கூறப்படுகின்றது. ஆகவே இது சமனற்ற வருமானப் பங்கீட்டை மேலும் அதிகரிக்கக் கூடியதாக அமையும் எனப்படுகின்றது. இதனைப் பேராசிரியர் ஹான்ஸ் சிங்கர் விளக்கும்போது "அசமத்துவம், பொருந்தாத் தொழினுட்பத்தைக் கொணரும்; பொருந்தாத் தொழினுட்பம், அசமத்துவத்தைக் கொணரும்" என்றார். இது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் "அபிவிருத்தியின் நச்சுச்சுழல்வு" எனப்படுகின்றது.

பொதுநோக்கில் அபிவிருத்திப் பயன்பாட்டிற்குரிய விஞ்ஞானம், தொழினுட்பம் ஆகியவற்றின் ஆற்றல், ஆக்கத்திற்கும் அழிவுக்கும் பயன்படுத்தக்கூடிய பெருஞ் சக்தியாக உள்ள போதும் வளர்முக நாடுகளில் வாழும் பெரும்பாலான மக்களுக்குப் பயன்படக்கூடிய சரியான தொழினுட்பத்தை அபிவிருத்தி செய்வதில் அது பயன்படுத்தப் படுவதில்லை. ராணுவபலம், விண்வெளி ஆய்வு, அணுசக்தி ஆய்வு போன்றவற்றிற்காகவே அவற்றின் அரைவாசிப் பகுதி பயன்படுகின்றது. அவற்றிலிருந்து ஒரு வகையான பக்க விளைவுகள் சில வறிய நாடுகளுக்குக் கிடைப்பது உண்மையானாலும், வறிய நாடுகளுக்குப்

பாதக்ம் விளைவிக்கக்கூடிய ஆய்வுகள், அபிவிருத்திகளின் காரணமாக இந்த நல்ல பக்க விளைவுகளும் அற்றுப் போகின்றன. எடுத்துக் காட்டாக அபிவிருத்தி என்ற பின்னணியில் அயன மண்டல நாடுகளின் (அதிக வறிய நாடுகள்) உற்பத்திப் பொருள்களுக்குப் போட்டியாக அல்லது ஈடாகச் செயற்கை மாற்றீடுகளை உற்பத்தி செய்வதும்; விஞ்ஞான, தொழினுட்ப ஒருங்கிணைப்பு என்ற பெயரில் வளர்முக நாடுகளிலிருந்து மூளைசாலிகள் வெளிப்பாய்ச்சப்படுதலும் அபிவிருத்திப் பெறுபேற்றில் வறிய நாடுகளைப் பாதிக்கும் முக்கிய இரு பெரும் தீய விளைவுகள் எனப்படுகின்றன.

ஆகவே இன்றைய நிலையில் தேவையான கொள்கை மாற்றங்கள் இல்லாத பட்சத்தில் செல்வந்த நாடுகளுக்கும், வறிய நாடுகளுக்கு மிடையிலான அபிவிருத்திப் பெறுபேறுகளின் சமமின்மை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வது தவிர்க்க துடியாததாகும்.



# கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| அடிப்படை | - | **Basic** |
| அடைவு | - | **Attainment** |
| அணிசேரா | - | **Non-Align** |
| அதிகரிப்பு | - | **Increase** |
| அபிவிருத்தியடைந்த | - | **Developed** |
| அபிவிருத்தியடைந்து வரும் | - | **Developing** |
| அபிவிருத்தி மட்டம் | - | **Level of Development** |
| அளவீடு | - | **Mesurement** |
| ஆணைக்குழு | - | **Commission** |
| ஆய்வு | - | **Research** |
| ஆய்வுப்பொருள் | - | **Thematic** |
| ஆயுள் எதிர்பார்ப்பு | - | **Life expectancy** |
| ஆள்வீத வருமானம் | - | **Per Capita income** |
| இட அமைவு | - | **Location** |
| இடை | - | **Mean** |
| இரட்டைத்தன்மை | - | **Dualism** |
| உற்பத்தி | - | **Product** |
| உயர்வருமானம் | - | **High - income** |
| ஊதியம் | - | **Wages** |
| எண்ணக்கரு | - | **Concept** |
| எல்லை | - | **Boundary** |
| எழுத்தறிவு | - | **Literacy** |
| குறைவிருத்தி | - | **Under Developed** |
| குறைந்த வருமானம் | - | **Low-income** |
| கைத்தொழில் | - | **Industry** |
| சத்துணவு | - | **Nutrients** |
| சந்தை | - | **Market** |
| சமமின்மை | - | **Inbalance** |
| சர்வதேச | - | **International** |
| சிசுமரணவீதம் | - | **Inflationrate** |
| சுட்டி | - | **Index** |
| சூழல் | - | **Environment** |
| செய்திட்டம் | - | **Project** |
| தசாப்தம் | - | **Decade** |

| | | |
|---|---|---|
| தொழினுட்பம் | - | Technical |
| நுகர்வு | - | Consumption |
| பாரம்பரிய | - | Traditional |
| பிறப்புவீதம் | - | Birth Rate |
| மனித அபிவிருத்தி | - | Human-Development |
| மத்திம வருமானம் | - | Middle-income |
| முதலீடு | - | Investment |
| மூலவளம் | - | Resource |
| வளர்ச்சிவீதம் | - | Growth rate |
| வாழ்க்கைச்சுட்டி | - | Life Index |
| வாழ்க்கைத்தரம் | - | Standard of Life |
| வெளியீடு | - | Output |

## உசாத்துணை நூல்கள்


1. A NEW CONCEPT OF DEVELOPMENT- Francios Perroux 1983

2. COMMUNITY DEVELOPMENT- Ronald Dore & Zoemars -1981

3. MEASURING DEVELOPMENT - N.Baster

4. ECONOMIC & SOCIAL DEVELOPMENT - E.S.Dunn

5. DEVELOPMENT FORUM - United Nation University & DFI- 1980-1994

6. REFUGEES - U.N.High Commissioner Information Section Geneva- 1980-April 1995

7. COURIER - Unesco - 1980-1994

8. ANNUAL REPORT - IFAD - 1993

9. WORLD HUMAN DEVELOPMENT REPORT - 1990-1994- World Bank

10. WORLD DEVELOPMENT REPORTS - 1980-1994 - World Bank

11. THE WORLD BANK ATLAS (25th Anniversary Edition) 1993

12. INTERNATIONAL FINANCIAL STATISTICS YEAR BOOK - IMF - 1992-1994

# நூலாசிரியர் பற்றி . . .



க.பொ.த.(உயர்தர) வகுப்புகளுக்கான ஆசிரிய கல்விக் கருத்தரங்குகளை கல்வி அமைச்சின் முன்னைய பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பின் பேரில் பல மாவட்டங்களிலும் நடாத்திய எஸ்.ஐ.எம்.ஹம்ஸா அவர்கள் நீண்ட காலமாக உயர்தர வகுப்புக்களில் புவியியல் பாடத்தைக் கற்பித்தலில் சிறந்த அனுபவம் பெற்றவர். தற்போதைய தேசிய கல்வி நிறுவகம் ஒழுங்கு செய்யும் புவியியல் வளவாளர் களைப் பயிற்றுவிக்கும் வேலையமர்வுகளிலும் பங்களிப்புச் செய்து வருகின்றார்.

பேராதனைச் சர்வகலாசாலைப் பட்டதாரியான இவர் படைப்பிலக்கியத் துறையிலும் மிகச் சிறந்து விளங்குபவர். நீண்ட காலமாக தேசியப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் ஆக்க இலக்கியங்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் படைத்து வருகின்றார். 'திக்குவல்லை ஹம்ஸா' என்ற பெயரில் இவரது பல ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இவரது முதல் பிரசுர முயற்சியாக 1969 ஆம் ஆண்டில் 'பேராதனைப் பல்கலைக்கழக மஜ்லிஸ்' சஞ்சிகை வெளிவந்தது. பின்னைய காலங்களில் திக்குவல்லை எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட 'பூ' ஆண்டு மலர்கள், 'மல்லிகை' திக்குவல்லை மலர், முன்னைய பாடவிதான அபிவிருத்தி நிலையம் வெளியிட்ட உயர்தர வகுப்புகளுக்கான புவியியல் ஆசிரிய கைந்நூல், புவியியல் மூலவள நூல் - 1, 2 ஆகியவற்றிலும், தற்போதைய தேசிய கல்வி நிறுவகம் தயாரித்துள்ள உயர்தர வகுப்புக்கான புதிய புவியியல் பாடத்திற்குரிய வளவாளர் கையேடு, கொழும்புப் பல்கலைக்கழக புவியியலாளர் சங்கம் வெளியிடும் 'புவியியல் செய்திமடல்' ஆகியவற்றிலும் இவரது பங்களிப்பு மிக முக்கியமானது. இந்த முயற்சிகளின் ஒரு வளர்ச்சியாக 1984, 1985 ஆகிய வருடங்களில் இருபதிப்புக்களாக உயர்தர வகுப்புக்களுக்கான இவரது 'அபிவிருத்திப் புவியியல்' வெளிவந்தது. தற்போது புதிய நான்காம் பதிப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

ஹம்ஸா அவர்கள் சமூகக்கல்வி ஆலோசகராகவும், உயர்தரப் புவியியல் ஆலோசகராகவும், வெலிகம அறபா மத்திய கல்லூரி அதிபராகவும் கடமையாற்றிய பின், தற்போது மகரகம தேசியக் கல்வி நிறுவகத்தில் செயற்றிட்ட அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

- எம்.எஸ்.ஏ.எஸ் -



